இனி இது ரகசியம் அல்ல!

இப்போது, தமிழர் அரசியலில் இரு அரசியல் தலைவர்களுக்கு இடையிலான மோதல் – குறிப்பாக கருத்து மோதல் – அதிகம் சுவாரஸியமாக பேசப்படுவதுண்டு.

ஒருவர் குரு; மற்றவர் சிஷ்யர். பெரியவர் மற்றவரைத் தனது சட்ட மாணவன்

பக்கம் 02 ›››

காலைக்கதிர்
Kalaikathir
விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 20 வெள்ளிக்கிழமை 05.07.2019 கதிர் 242



# கொழும்புக்கு நாளை வருகின்றார் கோட்டா!

## 11ஆம் திகதி தேர்தல் பணிகளை ஆரம்பிப்பார்

கொழும்பு, ஜூலை 05

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ நாளை சனிக்கிழமை இலங்கை திரும்புகிறார். இலங்கை வந்த உடனேயே, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளில் அவர் இறங்கவுள்ளார்.

பக்கம் 11 ›››

# பாடசாலையில் சுகயீனமுற்ற மகனை பார்க்க வந்த தந்தை சுட்டுக்கொலை!

## காவலுக்கு நின்ற சிப்பாய் கைவரிசை காலியில் நேற்றுப் பரிதாபச் சம்பவம்



கொழும்பு, ஜூலை 05

காலி, அக்மீமன பாடசாலை ஒன்றுக்குள் பிரவேசிக்க முயன்ற ஒருவர் மீது அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இதன்போது படுகாயமடைந்த 39 வயதுடைய அந்த நபர், கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டை நடத்திய இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

பக்கம் 11 ›››

## மட்டக்களப்பில் 100 புத்தர் சிலைகளை முஸ்லிம் தீவிரவாதிகளே சேதமாக்கினர்

### மங்களராம விகாராதிபதி பரபரப்புக் கருத்து



மட்டக்களப்பு, ஜூலை 05

மட்டக்களப்பு மாவட்டத்தில் 100 வரையான புத்தர் சிலைகள் சேதமாக்கப்பட்டன, அழிக்கப்பட்டன. அவற்றை தமிழர்கள் தான் செய்கிறார்கள் என இது வரை நினைத்

பக்கம் 11 ›››

## ஒரே குரலில் நின்றால் மட்டுமே ஆக்கிரமிப்புகளை நிறுத்தலாம்

### சிவாஜிலிங்கம் கருத்து

முல்லைத்தீவு, ஜூலை 05

தமிழர்களின் பாரம்பரிய பூமியில் உள்ள அடையாளங்களை அழித்

பக்கம் 11 ›››

## தூக்குத் தண்டனையை நிறுத்துமாறு உயர்மன்றில் சுமந்திரன் முன்னிலை

### இன்று வரை வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 05

மரண தண்டனையை நிறுத்துமாறு கோரி மரண தண்டனைக் கைதி

பக்கம் 11 ›››

## லொறியும் டிப்பரும் மோதுண்டு பளையில் நேற்று கோர விபத்து!

### சாரதிகள் இருவரும் பரிதாப மரணம்



கிளிநொச்சி, ஜூலை 05

கிளிநொச்சி, பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் பகுதில் நேற்று அதிகாலை 2 மணியளவில் மரக்கறிகள் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த லொறியும் எதிர்த்திசையில் வந்துகொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு

பக்கம் 11 ›››



## முஸ்லிம்கள் மீதான அடக்குமுறை விரைவில் முடிவுக்கு வரவேண்டும்!

### மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 05

முஸ்லிம்களுக்கு எதிரான தன்னிச்சையான கைதுகள் மற்றும் பிற முறைகேடுகளை முடிவுக்குக் கொண்டு

பக்கம் 11 ›››

## ஜனாதிபதித் தேர்தலில் சஜித் போட்டியிடுவாரா?

### 8ஆம் திகதியே இறுதி முடிவு

கொழும்பு, ஜூலை 05

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர்

பக்கம் 11 ›››



## ஜனாதிபதி மாளிகையை சூழவுள்ள காணிகளை அடையாளம் காணும் பணிகள் நேற்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 05

வலி வடக்கில் காங்கேசன்துறையில் மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையைச் சூழவுள்ள பொது மக்களின் காணிகளை இனம்காணும் செயற்பாடு நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

பக்கம் 11 ›››





மூத்த ஊடகவியலாளரும் காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியருமான என். வித்தியாதரனின் 60ஆவது பிறந்த நாள் நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா, ரிஷாத் பதியுதீன், அங்கஜன் இராமநாதன், ரவூப் ஹக்கீம், மேல் மாகாண ஆளுநர் முஸம்மில், ஊடகவியலாளர்கள், ஊடகப் பிரதானிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ஐ)

# ஜேர்மன் தூதுவர் ஜோன் றொட் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

ஜேர்மன் நாட்டின் தூதுவர் ஜோன் றொட் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்றுப் பிற்பகல் ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

29 வருடங்களுக்கு பின்னர் தமது இடத்தைப் பார்வையிட காங்கேசன்துறை ,கீரிமலை மக்கள் நேற்று விஜயம் செய்ததை நினைவுகூர்ந்த ஆளுநர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொதுமக்களுடைய காணிகளை அவர்களிடமே விடுவிக்கும் செயற்பாடுகளை ஏப்ரல் 21ஆம் திகதிக்கு பின்னர் தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் அதற்காக ஆளுநர் என்ற வகையில் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் தொடர்பில் தெரிவித்த ஆளுநர், ஜேர்மன் அரசால் வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவமுடியுமான வழிகளில் உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

அதேவேளை வடமாகாணம் எதிர்காலத்தில் முகம்கொடுக்கவுள்ள நீர்ப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு ஐந்து திட்டங்கள் குறித்து விளக்கமளித்த ஆளுநர், அதன் முதற்திட்டமான வடமராட்சி களப்பு திட்டம் குறித்தும் தெளிவுபடுத்தினார். (ஐ)



# நீராவியடி பிள்ளையார் ஆலயத்தில் 108 பானைகளில் நாளை பொங்கல்!

## தமிழர் திருவிழாவுக்கு ஏற்பாடு

முல்லைத்தீவு, ஜுலை 05

முல்லைத்தீவு – பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் இருப்பையும், தமிழர்களின் நிலவுரிமையையும் உறுதிப்படுத்தும் வகையில், தமிழர் திருவிழா எனும் தொனிப்பொருளில் நாளை சனிக்கிழமை 108 பானைகளை வைத்து பொங்கல் விழாவை முன்னெடுக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம், கோட்டைக்கேணி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு பாரம்பரிய மடைப்பண்டமெடுத்தலும் 108 பானைப் பொங்கலும் இடம் பெறவுள்ளது.

மடைப்பண்டமெடுப்பின்போது அவ்வாலயம் சார்ந்த மக்களும் அதன் பின்னர் இடம்பெறும் பொங்கலின்போது முற்பகல் 10.30 மணிக்கு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான மக்கள் பலத்தை காண்பிக்கும் வகையில் இளைஞர்கள், யுவதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் மதத் தலைவர்கள் உள்ளிட்டோரை மதங்களைக் கடந்து நில ஆக்கிரமிப்புக்கு எதிரான உணர்வுள்ள தமிழர்களாய் ஒன்றிணையுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தத் தமிழர் திருவிழாவான 108 பானைப் பொங்கல் விழாவை ஆலய அறங்காவலர் குழுவுடன் இணைந்து சமூக வலைத்தள நண்பர்கள் ஒழுங்கமைத்து முன்னெடுக்கவுள்ளனர்.

இந்தப் பொங்கலுக்கு வருகை தரும் மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் இருந்தும் பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# மட்டக்களப்பில் யானை தாக்கி நேற்றும் குடும்பஸ்தர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பகுதியில் நேற்றுக் காலை மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் வயலுக்குச் சென்ற விவசாயி ஒருவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கொண்டையன்கேணி வாழைச்சேனையைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான சி.கந்தசாமி (வயது–52) என்பரே உயிரிழந்தவராவார். மனைவி அதிர்ஸ்டவசமாக உயிர் தப்பியுள்ளார்.

வாழைச்சேனையில் இருந்து முறுத்தானையிலுள்ள தமது வயலுக்கு இருவரும் செல்லும்போது வேப்பையடி திடல் காட்டு வழிப்பாதையில் மறைந்து நின்ற யானை தங்களைத் தாக்கியதாகவும் தாம் யானையின் தாக்குதலில் இருந்து உயிர் தப்பித்துக்கொள்ள ஓடியதாகவும் கணவர் தாக்குதலில் உயிரிழந்துள்ளார் எனவும் மரணமடைந்தவரின் மனைவி தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன் தினம் மட்டக்களப்பு – கரடியனாறு குசலான் மலைப் பிரதேசத்தில் வைத்து பங்குடாவெளி பிரதேசத்தைச் சேர்ந்த ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்ட 2 பிள்ளைகளின் தந்தையும் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பார். பெரியவர் தனது சட்ட விரிவுரையாளர் என்று பெரும் மரியாதை கொடுப்பார் வயதில் சிறியவர்.

வெளியில் பெயருக்கு குரு – சிஷ்யராக ஒருவரை ஒருவர் 'முதுகு சொறிந்து' கொண்டாலும் அரசியலிலும், சட்ட மோதல்களிலும் இருவரும் இன்று கீரியும் பாம்பும்தான்.

ஒருவர் – நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன். மற்றவர் – ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

அவர்களின் கீரியும் பாம்பும் போக்குக்கு ஓர் உதாரணம் இது:-

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் ஒரு தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்தார் 'சிஷ்யர்' சுமந்திரன்.

"தேர்தல் ஒன்று வரவேண்டும், அதில் வடக்கு முன்னாள் முதலமைச்சர் விக்கியும் போட்டியிட வேண்டும். அதன் மூலம் அவர் கட்டுக்காசையும் இழக்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும்." என்று கிண்டலடித்தார் அவர்.

இந்தச் செய்தி நேற்றுக் காலை 'காலைக்கதிர்' நாளிதழின் முன் பக்கத்தில் பிரசுரமானது.

எதிர்வினையும் நேற்றுக் காலையே வந்தது.

காலை 6 மணியளவில் சுமந்திரனின் 'குருவான' நீதியரசர் விக்னேஸ்வரனுடன் தொலைபேசியில் உரையாடும் வாய்ப்புக் கிட்டியது.

'கட்டுக் காசையும் இழப்பார் விக்கி, அடித்துச் சொல்கிறார் சுமந்திரன்' என்று நமது பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பில் குறிப்பிட்டார் நீதியரசர் விக்னேஸ்வரன்.

"நான் கட்டுக் காசை இழப்பேனா, இல்லையா என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். ஆனால், நான் தெரிவு செய்யப்படுவதற்காக விருப்பு வாக்குகளைப் புரட்டிப் போட்டு எண்ண வேண்டிய தேவை எனக்கு வராது என்பது மட்டும் நிச்சயம். – என்றார் நீதியரசர்.

நான் சிரித்துக் கொண்டேன். அதற்கு மேல் பதில் ஏதும் கூற வில்லை.

நீதியரசர் விக்னேஸ்வரன் எதைக் கூற வந்தார் என்பதை நான் விவரிக்கப் போவதில்லை. வாசகர்களின் ஊகத்துக்கு விட்டு விடுகிறேன். நம் வாசகர்கள் மிகத் திறமையானவர்கள். வார்த்தைகளுக்கு – வரிகளுக்கு – இடையில் அச்சில் வராத விடயங்களையும் ஊகித்தறியும் ஏழாம் அறிவு உள்ளவர்கள்.

சரி. என்னுடைய இந்த எழுத்துக் குறித்து வாசகர்களாகிய நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்று நான் ஊகித்து உரைக்கவா?

நீங்கள் விக்கியின் ஆதரவாளர் என்றால் "ஆஹா அற்புதமான எழுத்து!" என்பீர்கள்.

சுமந்திரனின் ஆதரவாளர் என்றால் "இல்லாத ஒன்றுக்கு பூடகமாக அர்த்தம் கற்பித்து புரளி கிளப்பி விடுகின்றீர்கள்!" என்று கோபித்துக் கொள்வீர்கள்.

இரண்டு பக்கமும் சாராத நடுநிலை வாசகர் என்றால் "இருவரையும் முடிந்து விடும் நாரதர் வேலையை அற்புதமாகச் செய்யும் சிண்டு முடிப்பாளர்!" என்று என்னைச் சீண்டுவீர்கள்.

சரிதானே வாசகர்களே! நான் கூறுவது?

- மின்னல் -

# நுவரெலியாவில் உள்ள தமிழ்க் கட்சிகளால் மலையகத் தமிழர்களுக்கு பெரும் துரோகம்

## வேலுகுமார் எம்.பி. பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 05

**தொழிற்சங்க பிழைப்புக்காகவும், குறுக்குவழி அரசியலுக்காகவும் மலையக மக்களுக்கான தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை குழிதோண்டி புதைப்பதற்கு நுவரெலியாவை மையமாகக்கொண்டு இயங்கும் தமிழ்க் கட்சிகள் கங்கணம்கட்டி செயற்பட்டுவருகின்றன. – இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.**

சுயநல அரசியலுக்காக நுவரெலியா மாவட்டத்துக்கு வெளியில் வாழும் மலையகத் தமிழர்களை அடைவு வைப்பவர்களுக்கு விரைவில் மக்களாலேயே பாடம் புகட்டப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுடன் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றிய வேலுகுமார் எம்.பி., மேலும் கூறியவை வருமாறு:-

மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இருந்தால் போதும். ஏனையப் பகுதிகளில் வாழும் மலையக தமிழர்கள் அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்பட்டாலும் பரவாயில்லை என்ற நினைப்பிலேயே நுவரெலியாவிலுள்ள தமிழ்க் கட்சிகள் அரசியல் நடத்திவருகின்றன.

முன்னர் இருந்தவர்கள் எப்படியோ அதே வழியில்தான் தற்போதைய தலைவர்களும் பயணித்துக்கொண்டிருக்கின்றனர். இது மலையக மக்களுக்கு பெரும் சாபக்கேடாகும்.

கண்டி, இரத்தினபுரி, மாத்தளை உட்பட மலையகத்தில் பெருந்தோட்டப்பகுதிகளில் தொழிற்சங்க அலுவலகங்களைத் திறந்து சந்தா வேட்டை நடத்துவதே நுவரெலியாவிலுள்ள தமிழ்க் கட்சிகளின் பிரதான நோக்கமாக இருக்கின்றது.

தமிழ் மக்கள் எந்த கட்சியில் அங்கம் வகித்தாலும், யாருக்கு வாக்களித்தாலும் அது தமக்கு தேவையற்ற விடயமாகவே அக்கட்சிகளின் உறுப்பினர்கள் கருதுகின்றனர். இதன் காரணமாகவே தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை குழிதோண்டி புதைப்பதற்காக



பேரினவாதிகளுடன் கரம்கோர்த்து செயற்பட்டுவருகின்றனர்.

'ஒற்றுமை' என்ற சொல்லை உதட்டளவில்மட்டும் உச்சரித்துக்கொண்டு செயற்பாட்டில் 'வேற்றுமை' காட்டும் அரசியல்வாதிகளுக்கு காலம் வெகுவிரைவிலேயே தக்க பதிலை வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்காகவும், உரிமை அரசியலுக்காகவும் மக்களை பிரித்தாளாமல் ஓரணியில் திரட்டும் முயற்சியில் நாம் ஈடுபட்டுவரும் நிலையில், எங்களின் காலைவார முற்படுவது பச்சோந்தி அரசியலின் உச்சகட்டமாகும்.

குறிப்பாக 19 வருடங்களாகக் கண்டி வாழ் தமிழ் மக்களுக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இருக்கவில்லை.

அந்நிலைமையை நாம் மாற்றியமைத்தோம். தமிழ்ப் பிரதிநிதித்துவத்தின் முக் கியத்தை மக்களும் இன்று உணர்ந்துள்ளனர்.

அதேபோல் இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை ஆகிய மாவட்டங்களிலும் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை நாம் வென்றெடுக்கவேண்டும். தற்போது இருப்பவற்றை தக்க வைத்துக் கொள்ளவேண்டும்.

மாறாக சலுகைகளுக்கு அடிபணிந்து உரிமை அரசியலை விட்டுக்கொடுத்தால் எதிர்காலத்தில் மலையக தமிழ் மக்கள் அரசியல் அநாதைகளாக்கப்படும் அபாய நிலை இருக்கின்றது – என்றார். (ஐ)

---

## குருநாகல் மருத்துவர் ஷாபியை தடுத்து வைப்பது முறையல்ல!

### பாதுகாப்பு அமைச்சுக்கு சி.ஐ.டி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 05

குருநாகல் வைத்தியசாலையின் வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன் எந்தவித தீவிவாதச் செயற்பாடுகளுடனும் தொடர்புபடாத நிலையில் அவரைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருக்கின்றமை முறையானது அல்ல என குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

வைத்தியர் ஷாபி ஷிஹாப்தீன் கடந்த மே மாதம் 27ஆம் திகதி முதல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

எனினும் அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள தீவிரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாதமையால் அவர் மீதான தடுப்புக் காவலை இரத்துச் செய்வது நல்லது எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே கடந்த 27ஆம் திகதி குருநாகல் நீதிமன்றத்தில் தெரிவித்ததாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினர் பாதுகாப்பு அமைச்சுக்கு சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## சமஷ்டித் தீர்வையும் புறந்தள்ளுகிறது அரசு

### சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜுலை 05

தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு சமஷ்டி அடிப்படையிலான தீர்வைப் பெற முயற்சிக்கின்றபோது, அதனையும் இலங்கை அரசு புறந்தள்ள முயற்சிக்கிறது எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு புதிய அரசமைப்பு ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதயசுத்தியுடன் முழு முயற்சிகளில் ஈடுபட்டதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்–

புதிய அரசமைப்பு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொண்டோம்.

குறிப்பாக அரசமைப்புக் குழுவில் அங்கம் வகித்ததோடு, 6 உபகுழுக்களில் அங்கம் வகித்து முழுமையான கருத்துக்களையும் வழங்கியிருந்தோம். ஆனால் அதனை இலங்கை அரசு உதாசீனம் செய்து ஏமாற்றிவிட்டது.

தமிழர்கள் தனி நாட்டுக் கோரிக்கையை கைவிட்டு சமஷ்டி அடிப்படையிலான தீர்வைப் பெற முயற்சிக்கின்றபோது அதனையும் புறந்தள்ளவே இலங்கை அரசு முயற்சிக்கிறது – என்றார். (ஐ)

---

## 15 பேர் மட்டுமே இளம் எம்.பிக்கள்!

கொழும்பு, ஜுலை 05

நாடாளுமன்றத்தில் 30 தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் மாத்திரமே உள்ளனர் என Manthri.lk என்ற இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 79 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 60 வயதைக் கடந்தவர்களென்றும் 4 உறுப்பினர்கள் 81 – 90 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 71– 80 வயதுக்கிடைப்பட்டவர்கள் 26 பேர், 61 – 70 வயதுக்கு இடைப்பட்டவர்கள் 49 பேர், 51 – 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள் 74 பேர், 41 – 50 வயதுக்கிடைப்பட்டவர்கள் 56 பேர் என்றும் இந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் வயது தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்றும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது. (ஐ)

---

## சங்கானை கடையொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!

*யாழ்ப்பாணம், ஜுலை 05*


*சங்கானைப் பகுதியில் அமைந்துள்ள கடை யொன்றின் மீது ஆவா குழுவினர் நேற்றுமுன்தினம் இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.*

*இந்தத் தாக்குதலால் பெரிதாகச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை எனக் கூறப்படுகின்றது.*

*சம்பவம் குறித்த விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.*

---

## பெருந்தொகை துப்பாக்கி ரவைகள் திருகோணமலையில் நேற்று சிக்கின!





திருகோணமலை, ஜுலை 05

திருகோணமலை – சேருவில – கந்தளாய் பிரதான வீதியில் கலு பாலமருகில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் பெருமளவு துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ரி – 56 துப்பாக்கித் தோட்டாக்கள் 2292 மற்றும் எல் எம் ஜி, எம் 9, துப்பாக்கி ரவைகள் போன்றனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளையில் இவற்றைக் கண்டுபிடித்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றிய ஆயுதங்கள் சேருநுவர பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதையடுத்து மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

---

## காட்டு யானை தாக்கி மாடு மேய்த்தவர் சாவு

மட்டு, ஜுலை 05

மட்டக்களப்பு – கரடியனாறு குசலானை மலையடிவாரத்தில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்தார்.

மாடுகளைப் பராமரித்துக் கொண்டிருந்தவரை, காட்டுப் பகுதிக்குள் இருந்து திடீரென வெளிவந்த யானை தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

பாலர்சேனை, வேப்பவெட்டுவானைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## ஊரைக் கெடுக்கும் ஊடகங்கள்

**'கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தானாம்' – என்று ஒரு பழமொழி உண்டு.**

**அரைகுறையாக விடயங்களை செவிமடுத்து விட்டு வந்து அவற்றை ஊருக்கு ஒப்புவிப்பவனால் ஊரே குழம்பிப் போகும் என்று இக்கூற்றின் பொருள்.**

**இந்தக் கூற்று, நம் பேச்சு வழக்கில் நீண்ட நெடுங்காலமாக உண்டு. ஆனால், இந்தத் தலைமுறையில் பிறப்பெடுத்துள்ள நமது ஊடகப் பண்பியல்பை நேரத்துடன் ஊகித்தே நம் தமிழ் முன்னோர்கள் இந்தச் சொல்லாடலை நேரத்துடனேயே ஒழுங்கமைத்து வைத்திருந்தனரோ என்ற சந்தேகம் எனக்கு இப்போது ஏற்படுகின்றது. எங்கள் ஊடகங்கள் இன்று செயற்படுகின்ற போக்கை பார்க்கும்போது எனது சந்தேகம் சரியானது தான் போலத் தோன்றுகின்றது.**

**கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்த மாதிரி நமது ஊடகங்கள் பலவும் செய்திகளை அரைகுறையாகப் புரிந்து கொண்டு வெளியிடுகின்றமையால் தேவையற்ற குழப்பங்கள் எழுகின்றமை கண்கூடு.**

**யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆற்றிய உரையை நமது ஊடகங்கள் பிரசுரித்த முறைமை 'கேள்விச் செவியன்' பாணியில் இருந்தமை மறுக்க முடியாத உண்மையாகும்.**

**அதனால் வீண் குழப்பங்கள், சர்ச்சைகள், தேவையற்ற முரண்பாடுகள் அரசியல் வானில் எழுந்திருக்கின்றமையும் அவதானிக்கத்தக்கது.**

**"தமிழர்களுக்கு தீர்வு கிடைக்காவிட்டால், ஆயுதம் ஏந்திப் போராடுவது பற்றி சிந்திக்க வேண்டி வரும் என்று சம்பந்தன் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை செய்தார் – என்ற சாரப்பட நமது ஊடகங்களில் செய்தி வெளியானது.**

**அமைச்சர் மனோ கணேசன், முதற்கொண்டு முன்னாள் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி. வீ. விக்னேஸ்வரன் வரை அதற்கு எதிர்வினையாற்றியிருக்கின்றார்கள்.**

**".... இன்றைக்கு ஆயுதம் ஏந்தியவர்கள் எங்களுடன் இணைந்து செயற்பட முடியாத நிலையில், ஆயுதம் ஏந்திப் போராடினால்தான் அரசியல் தீர்வு சம்பந்தமாக நீங்கள் ஆக்கபூர்வமாகக் கருமங்களை முன்னெடுப்பீர்கள், ஆயுதப் போராட்டம் இல்லாவிட்டால் – ஆயுத பலம் இல்லாவிட்டால் – அதை (அரசியல் தீர்வை) கைவிடலாம் என நினைப்பீர்களானால் இது ஒரு தவறான நிலைப்பாடு. அவ்விதமான ஒரு கருமத்தை நீங்கள் பின்பற்றுகின்றீர்களோ என்று சிந்திக்கத் தோன்றுகின்றது. அதையும் நாங்கள் பரிசீலிப்போம்."**

**– இதுவே அன்றைய தினம் ஆயுதப் போராட்டம் தொடர்பாக சம்பந்தன் கூறிய கருத்து.**

**இந்தப் பேச்சை எப்படித் திரிபுபடுத்திக் கூறினாலும் கூட 'ஆயுதம் ஏந்திப் பேராடுவது பற்றி சிந்திக்க வேண்டி வரும் எனச் சம்பந்தர் எச்சரித்தார்' என்று அர்த்தம் பண்ண முடியாது.**

**ஆனால் தங்களை நடுநிலை ஊடகம் என்று காட்டிக் கொள்ளும் தரப்புகள் ஆயுதம் ஏந்திப் போராடுகின்றமை குறித்துச் சிந்திக்க வேண்டி வரும் எனச் சம்பந்தன் கூறினார் என்று செய்திகளைப் பரப்பியமை மட்டுமன்றி, அதனடிப்படையில் தமிழர் தரப்பு அரசியல்வாதிகள் இடையே குழப்பத்தை ஏற்படுத்தும் குசும்புத்தனத்தையும் கனகச்சிதமாக அரங்கேற்றின.**

**ஆயுதம் ஏந்திப் போராடுவது பற்றி சிந்திப்பது குறித்து சம்பந்தன் கூறினார் என்று திரிபுபடுத்தப்பட்ட ஒரு செய்தியை ஓர் ஊடகம் தாராளமாகப் பிரசுரித்து விட்டு, அதை நேர்சீர் செய் யாமல் பார்த்திருப்பதும்**

**திரிபுபடுத்தப்பட்ட அந்தச் செய்தியின் அடிப்படையில் தமிழ்த் தலைமைகள் தங்களுக்குள் சேறுவாரி இறைக்கும் அளவுக்கு முரண்பாடு ஏற்படுவதற்கு இடமளித்துப் பார்த்திருப்பதும் – மிக மிக மோசமான போக்காகும். ஊடக அராஜகத்தின் உச்சமாக இது கொள்ளத்தக்கதாகும்.**

**இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர்கள் மத்தியில் இன்று மிகப்பெரிய – வரலாற்று பாரம்பரியம் கொண்ட – ஒரு கட்சி. தமிழர் தரப்பில் அதிக எண்ணிக்கையான மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு கட்டமைப்பு. அதன் சிரேஷ்ட தலைவரான சம்பந் தனின் உரை இவ்வளவு தூரம் திரிபுபடுத்தப்பட்டிருக்கையில் – காலங்காலமாக அஹிம்சை வழியில், தந்தை செல்வா பாணியிலான போராட்ட நெறிமுறைகளை வலியுறுத்தி நிற்கும் சம்பந்தன், ஆயுதப் போராட்டம் குறித்து சிந்திக்க வேண்டி வரும் என அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் என்ற அளவுக்கு செய்திகள் பரப்பப்படுகையில் – அக்கட்சி வெறுமனே பார்த்திருப்பது வியப்புக்குரியது.**

**சம்பந்தன் இவ்விடயம் குறித்து பேசியமை கடந்த 30 ஆம் திகதி ஞாயிறன்று. அடுத்த நாள் காலையில் திரிபுபடுத்தப்பட்ட செய்தி பிரசுரமானது. அது வைரலாக பரவியது. ஆனால் தமிழரசுக் கட்சி போன்ற பெரிய கட்டமைப்பு அது விடயத்தில் உடனடியாக எதிர்வினை காட்டியிருக்க வேண்டும். தவறைச் சுட்டிக்காட்டி, உண்மையை வெளிப்படுத்தி, நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும். விவகாரம் பூதாகரம் எடுத்து, சேதமும், சேதாரமும் தாராளமாக ஏற்படும் வரை மெத்தனமாகப் பார்த்திருந்து விட்டு, இப்போது கட்சியின் மூத்த தலைவர்கள் ஒவ்வொருவராக விடயத்தை மறுக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். இப்படி மறுப்பது குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடும் கதைதான்.**

**ஊரைக் கெடுக்கும் ஊடகங்கள் ஒரு புறம் என்றால், நிலைமையை உரிய நேரத்தில், உரிய முறையில் மறுக்கத் தெரியாத பெருங்கட்சிகள் மறுபுறத்தில்.**

**இந்நிலைமை நீடிக்கும் வரை நமது மக்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றமை தொடரவே செய்யும்.**

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு ஜனாதிபதியும் பிரதமருமே பொறுப்பு

## அடித்துக் கூறுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 05

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரே பொறுப்பு கூறவேண்டும் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அத்துடன், பொலிஸ்மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மீது பழி சுமத்தி விட்டுத் தமது பொறுப்பிலிருந்து இருவரும் விலகிக் கொண்டுள்ளனர் எனவும் ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திஸாநாயக்க குற்றஞ்சுமத்தினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களின் பின்னர் நாட்டில் உருவாகியுள்ள அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளை இல்லா தொழிப்பதற்கு ஜே.பி.வி. முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்க தேரர்களை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது நாட்டில் தற்போது இனவாதமும் மதவாதமும் உச்சமடைந்துள்ளன. இதனை இவ்வாறே விட்டுவிட்டால் அது பெரும் அழிவை ஏற்படுத்திவிடும்.

இதனைக் கட்டுப்படுத்த நாம் யோசனைகளை முன்வைத்துள்ளோம். அந்தவகையில், ஒரு சட்டம், கல்வி மறுசீரமைப்பு உள்ளிட்ட பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு தீர்வுத் திட்டத்தை நாம் முன்வைத்துள்ளோம்.

ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதலுக்கு ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசு பொறுப்புக்கூற வேண்டும். இதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே பொலிஸ் மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் இந்த விடயத்தில் பொறுப்புக் கூறவேண்டிய கடமை இருந்தாலும், இந்தக் கைதானது அதிகார வர்க்கத்தினர் தப்பித்துக் கொள்வதற்காக மேற்கொண்ட ஒரு செயற்பாடாகவே நாம் கருதுகிறோம்.

அத்தோடு, சோபா உடன்படிக்கை தொடர்பாகவும் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. அரசில் உள்ளவர்களுக்கு இந்த நாட்டின் பொதுச் சொத்துக்களை விற்பனை செய்ய எந்த உரிமையும் கிடையாது. எனவே, அமெரிக்காவுக்கு இந்த நாட்டைத் தாரை வார்க்கும் செயற்பாட்டுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க முடியாது. எனவே, இந்த சோபா உடன்படிக்கை கைச்சாத்திடுவதை நாம் எப்போதும் ஏற்றுக்கொள்ளவே மாட்டோம்.

மேலும், மரண தண்டனையை நிறைவேற்றவும் ஜனாதிபதி முயற்சித்துக் கொண்டிருக்கிறார். எமது நாட்டைப் பொறுத்தவரை சட்டக் கட்டமைப்பு தனவந்தர்களுக்கு ஒரு விதமாகவும் பணமில்லாதவர்களுக்கு ஒரு விதமாகவுமே காணப்படுகிறது. எனவே இவ்வாறான தன்மை கொண்ட ஒரு நாட்டில் மரண தண்டனையை நிறைவேற்றுவதை நாம் என்றும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் – என்றார். (ஐ)

# ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவன மோசடி: விசாரணைக்குழு அறிக்கை மைத்திரியிடம்

கொழும்பு, ஜூலை 05

ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடிகள் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று முன் தினம் தனக்கு கிடைக்கப் பெற்றதாகவும் அதில் அந்த நிறுவனத்தில் இடம்பெற்ற தில்லுமுல்லுகள் பல காணப்படுகின்றன எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறியுள்ளார்.

உயர் மட்ட அரசியல் தலைவர்கள் கோடிக் கணக்கான நிதி மோசடியில் ஈடுபட்டமை தொடர்பான தகவல்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். (ஐ)

## தடுப்புக் காவலில் சந்தேகநபர் கொலை;

# சுன்னாகம் பொலிஸார் ஐவருக்கு எதிரான குற்றச்சாட்டை நிராகரிக்க விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 05

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபரான சுமணனை தடுப்புக் காவலில் வைத்து சித்திரைவதை செய்த பின் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிரான குற்றப் பத்திரிகையை நிராகரிக்குமாறு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

சந்தேகநபர்கள் ஐவரும் சுமணனைச் சித்திரவதை செய்த குற்றத்துக்குச் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். அதனால் அவர்களுக்கு எதிராக சுமணனைக் கொலை செய்த குற்றச்சாட்டை முன்வைப்பது சட்ட ஏற்பாடுகளுக்கு முரணானது. அதனால் கொலைக் குற்றச்சாட்டு குற்றப் பத்திரிகையை மன்று தள்ளுபடி செய்யவேண்டும் என்று சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் கூறினர்.

இந்த வழக்கை விசாரிப்பதற்கு வேறொரு நீதிபதியை நியமிக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவரான பிரதம நீதியரசருக்கு விண்ணப்பம் செய்திருந்தார். அதனடிப்படையில் இந்த வழக்கை விசாரிப்பதற்கு யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி தாவூத் லெப்பை அப்துல் மனாப் நியமிக்கப்பட்டார்.

இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி தாவூத் லெப்பை அப்துல் மனாப் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

திசாநாயக்க முதியன்சேலாகே சிந்தக நிஷாந்த பிரிய பண்டார, ராஜபக்ஷ முதியன்சேலாகே சங்ஜீவ ராஜபக்ஷ, கோன்கலகே ஜயந்த, ஞானலிங்கம் மயூரன் மற்றும் வீரசிங்க தொரயலாகே ஹேமச்சந்திர வீரசிங்க ஆகிய ஐந்து எதிரிகளையும் அநுராதபுரம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மன்றில் முற்படுத்தினர். அவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் துஷித் ஜோன்சன், ஜே.பி.ஏ. ரஞ்சித்குமார், அக்ரம் ஆகியோர் முன்னிலையாகினர்.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் முன்னிலையானார்.

இதன்போதே எதிரிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மேற்படி விண்ணப்பத்தை மன்றில் முன்வைத்தனர்.

இந்த வழக்கை சிரேஷ்ட சொலிசிற்றர் ஜெனரல் குமாரட்ணம் நெறிப்படுத்துவார். அவர் மன்றில் முன்னிலையாக தவணை வழங்கப்பட வேண்டும்என்று அரசசட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் மன்றுரைத்தார்.

இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த மன்று வழக்கை செப்ரெம்பர் 27ஆம் திகதிவரை ஒத்திவைத்தது. (ஐ)

**நாளை**
**06.07.2019**
**சனிக்கிழமை**

சதுர்த்தி விரதம்

நட்சத்திரம்: மகம் பி.இ 2.14 வரை
திதி : சதுர்த்தி பி.ப 4.54 வரை
இராகுகாலம் : 8.58 – 10.28
சுப நேரம் : 2.58 – 4.28

இப்போது யாழ்ப்பாணத்தில் வெளியாகி, வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாமல் கொழும்பிலும் இலங்கையின் பிற இடங்களிலும், புலம் பெயர் தேசங் கள் எங்ஙனும் இலங்கை நேரப் படி அதி காலை யில் தினசரி தவறாமல் நாளிதழ் வடிவத்தில் தமிழ் மக்களை எட்டும் ஒரே பத்திரிகை

காலைக்கதிர் Kalaikathir

'வட்ஸ் - அப்', 'வைபர்', மின்னஞ்சல் மூலம் 'காலைக்கதிர்' நாளிதழை தினசரி இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்குத் தொடர்பு கொண்ட பல்லாயிரம் வாசகர்களுக்கு அணிகள் அணி களாகப் பிரித்து அதிகாலையிலேயே அஞ்சல் செய்து வருகி றோம். விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளாதோர் அல்லது புதிதாகப் பெற்றுக்கொள்ள விரும்புவோர்

kalaikkathirpaper@gmail.com
என்ற மின்னஞ்சல் மூலம்
அல்லது




0094 - 21 - 222 3000
என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளலாம். புலம்பெயர் தேசத்தில் உள்ள பல்லாயிரம் தமிழ் மக்களையும் உங்கள் 'காலைக்கதிர்' தினசரி அதிகாலை வேளையிலேயே தவறா மல் நாளிதழ் வடிவத்தில் எட்டுவதால், மரண அறி வித்தல், நினைவஞ்சலி உட்பட பிற விளம்பரங்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க காலைக்கதிரை நீங்கள் நாடலாம்.

விளம்பரத் தொடர்புகளுக்கு
முகாமையாளர், 'காலைக்கதிர்'
தொலைபேசி இலக்கம்
0094 - 21 - 222 3000
0094 - 776687760

# கதிரவெளியில் விபத்து; இளம் குடும்பஸ்தர் சாவு

மட்டு ஜூலை 05

மட்டக்களப்பு - கதிர வெளியில் இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வாகரைப் பொலிஸார் தெரி வித்தனர்.

நேற்றுமுன் தினம் பிற் பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வாகரை, நாகபுரம்பால் சேனையைச் சேர்ந்த வீரசிங்கம் சுதர்ன் (வயது 30) என்ற ஒரு குழந்தை யின் தந்தையே உயிரி ழந்துள்ளார்.

இவர் குழந்தைக்கு பால்மா முத்திரையைப் பெறுவதற்காக கதிர வெளி பிரதான வீதி யில் சைக்கிளில் பயணித் துக்கொண்டிருக்கும் போது திருகோண மலையிலிருந்து வந்த கார் ஒன்று மோதிய தில் படுகாயமடைந் தார்.

உடனடியாக வாகரை மாவட்ட வைத்தியசா லையில் அனுமதிக்கப் பட்டு பின்னர் மேல திக சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதும் வழியிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கார்ச் சாரதி கைது செய்யப் பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடு பட்டுள்ளனர்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ள சடலம் உடற்கூறாய் வுப் பரிசோதனைகள் முடிந்த பின்னர் உறவி னர்களிடம் ஒப்படைக் கப்படும் என பிரதேச திடீர் மரண விசா ரணை அதிகாரி தெரி வித்தார். (ஐ)

# உறுதியான தகவல் எதனையும் உளவுப் பிரிவு வழங்கவில்லை!

## பூஜித, ஹேமசிறி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அனுஜ நீதிமன்றத்தில் வாதம்

**கொழும்பு, ஜூலை 05**

**உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தேசிய உளவுத் துறை ஒருபோதும் உறுதி செய்யப்பட்ட தெளிவான தகவல்களை முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கோ அல்லது பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கோ அளித்திருக்கவில்லை என அவர்களது சட்டத்தரணியான அனுஜ பிரேமரத்ன கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்னவுக்கு அறிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தொடர் தற் கொலை குண்டுத்தாக்குதல்களை தடுப்பதற்கு அல்லது அதன் தாக் கங்களைக் குறைத்துக்கொள்வ தற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குற்றவியல் பொறுப்புச் சாட்டப்பட்டு, கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவும் முன்னாள் பாதுகாப் புச் செயலாளர் ஹேமசிறி பெர் னாண்டோவும் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டனர்.

அவ்விருவர் சார்பிலும் நேற்று முன் தினம் கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் வாதங் களை முன்வைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தெளிவான உளவுத் தகவல் கள் முன்னாள் பாதுகாப்புச் செயலா ளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக் கும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு உளவுத்துறையால் வழங்கப்பட்டுள்ளமை விசாரணை களில் தெளிவானதாக அரசின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் துஷித் முதலிகே நீதிமன்றில் தெரிவித்தபோதும் அதனை பூஜித் மற்றும் ஹேமசிறியின் சட்டத் தரணி மறுத்தார்.

அத்துடன் தேசிய உளவுத்துறை நேரடியாக ஜனாதிபதிக்கே தகவல் களை அளிப்பதாகவும், அது ஜனாதிபதியின் கீழ் உள்ள துறை எனவும் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் என்னும் ரீதியில் 2015.01.08 ஆம் திகதி வெளியிட்ட 1897/15 எனும் விசேட வர்த்தமானிப் பிர தியை மன்றில் சமர்ப்பித்து வாதிட்ட அனுஜ பிரேமரத்ன, கடந்த 2018 ஒக்டோபரின் பின்னர் பொலிஸ் மா அதிபர் பாதுகாப்புச் சபை கூட் டத்துக்குக் கூடச் சேர்க்கப்பட்டி ருக்கவில்லை எனவும் சுட்டிக்காட் டினார். (ஐ)

# மீனவர்கள் 16 பேர் கைது

திருமலை, ஜூலை 05

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைச் சட்டவிரோத மான முறையில் பயன்படுத்தி திருகோணமலை – கல்லடிச் சேனையில் மீன்பிடி நட வடிக்கைகளில் ஈடுபட்ட மீன வர்கள் 16 பேரைக் கடற்படை யினர் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கடற் படையினரால் மேற்கொள் ளப்பட்ட கண்காணிப்பு நட வடிக்கைகளின்போதே இவர் கள் கைது செய்யப்பட்டுள் ளனர்.

அத்துடன் இரண்டு இயந் திரப்படகுகளும், தடை செய் யப்பட்ட மீன்பிடி வலைகள் இரண்டும் கைப்பற்றப்பட்டன என தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சிவத்தம்பி நினைவுப்பேருரை நாளை



கொழும்பு, ஜூலை 05

தமிழறிஞர் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி நினைவுப்பேருரை நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப் பிள்ளை மண்டபத்தில் இடம் பெறவிருக்கிறது.

சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையி லான இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து கற் கைகள் பீடத்தின் விரிவுரை யாளர் தி.செல்வமனோகரன் இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழ்ப்புலமை மரபு என்ற தொனிப்பொருளில் உரைநிகழ்த்துவார்.

அறிமுகவுரையை சமூக ஆய்வாளர் தெ.மதுசூத னனும் நன்றியுரையை பத் திரிகையாளர் வீ.தனபால சிங்கமும் நிகழ்த்துவர். தமி ழியல் ஆய்வுகளுக்கான பேராசிரியர் சிவத்தம்பி நிலையம் இதை ஏற்பாடு செய்திருக்கிறது. (ஐ)

# மின்சாரப் பிரச்சினைக்கு இரு வாரங்களுக்குள் தீர்வு

கொழும்பு, ஜூலை 05

மின்சாரத்துறையில் நிலவும் பிரச்சினை களுக்கு இரண்டு வாரங்களுக்குள் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பான பேச்சு பொறியியலாளர்களுடன் மேற்கொள் ளப்படும் எனவும் பாவனையாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் துரித தீர்வை வழங்குவதே அரசின் எதிர்பார்ப் பாகும் எனவும் அவர் கூறினார்.

கடந்த 26ஆம் திகதி மின்சாரத்துறை யுடன் சம்பந்தப்பட்ட பல அமைப்புக்கள் ஆரம்பித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், இந்தப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத் தில் எந்த வகையிலும் மின்சாரம் துண்டிக்கப் படமாட்டாது எனவும் குறிப்பிட்டார். (ஐ)

# 250 புதிய பாடசாலை கட்டடங்கள் பாவனைக்காக நேற்றுக் கையளிப்பு

கொழும்பு, ஜூலை 05

அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்றிட்டத் தின் கீழ், சகல வசதிகளுடனும் கூடிய 250 பாடசாலைகளை மாணவர்களின் பாவனைக் கக் கையளிக்கும் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

பேராதனை தேசிய கல்வி யியற் கல்லூரியில் இதன் தேசிய நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரி யவசம் ஆகியோரின் தலை மையில் இடம்பெற்றது.

இந்த வேலைத்திட்டத் தின் கீழ், 200 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கடந்த மார்ச் மாதம் ஒரே நேரத்தில் திறந்து வைக்கப்பட்டன. நேற்று இரண்டாம் கட்டமாக மாணவர்களின் பாவனைக் காக புதிய பாடசாலைகள் திறந்து வைக்கப்பட்டன. இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்காக அரசு 450 கோடி ரூபாவை செலவிட் டுள்ளது. (ஐ)

# 17 மாவட்டங்களில் வறட்சி 459,267 பேருக்குப் பாதிப்பு

*கொழும்பு, ஜூலை 05*

*நாட்டிலுள்ள 17 மாவட்டங்களில் நிலவும் வறட்சியான காலநிலையினால் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 520 குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.*

*இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 459, 267 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 65 பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.*



*அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டமாக மட்டக்களப்பு காணப்படுவதாகவும் அனர்த்த மத்திய நிலையம் அறிவித்துள்ளது.*



# உச்ச நீதிமன்றத் தீர்ப்புப் பட்டியலில் தமிழ் இடம்பெறாதமை வருத்தமே!

## தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 05

உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை மொழி பெயர்த்து வெளியிடும் உச்சநீதிமன்றப் பட்டியலில்தமிழ் இல்லாதது வருத்தமளிக்கிறது என தெரிவித்துள்ள தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அதனை மாநில மொழிகளில் மொழியாக்கம் செய்து வெளியிடப்படுவது மக்களுக்கு உதவியாக இருக்கும் என்றும் கூறினார்.

இது தொடர்பாக ஸ்டாலின் நேற்று முன் தினம் வெளியிட்ட அறிக்கையில், இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளை மாநில மொழிகளிலும் மொழியாக்கம் செய்து வெளி யிடுவதற்கு, உச்ச நீதிமன்றத் தலைமை நீதி பதி விரும்புவதாக வெளிவந்துள்ள செய்தி மகிழ்ச்சியளிக்கிறது. தி.மு.க.வின் சார்பில், இந்த நல்ல முயற்சியை மனதார வரவேற் கின்றேன்.

வழக்குகளைத் தொடுப்பவர்கள் மொழிப் பிரச்சினையின்றி – எந்தவிதக் குழப்பமும் சந்தேகமும் இல்லாமல், தீர்ப்புகளின் சாராம்சத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், வழக்கை நடத்திய தங் களதுவழக்கறிஞர்கள்எடுத்துவைத்த வாதங்களையும், எதிர்த்தரப்பின் பிரதிவாதங்களையும்நன்குதெரிந்து புரிந்துகொள்ள வழிவகுக்கும் இந்த முயற்சி இந்திய நீதி பரிபாலனச் சரித்திரத்தில் மிக முக்கிய மைல்கல் என்றே கருதுகின்றேன்.

இந்த முயற்சியின் விளைவாக ஆங்கிலம் தவிர கன்னடம் – தெலுங்கு உள் ளிட்ட ஐந்து மொழிகளில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கும். அதேவேளையில், தமிழ் மொழி உச்ச நீதி மன்றத்தின் அந்தப் பட்டியலில் இடம் பெறாதது மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது.

இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் அலுவலக மொழி என்ற அந்தஸ்தில் செம்மொழியாம் தமிழ் மொழி ஆரம்பம் முதலே இருந்து வருகின்றது. ஆகவே, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகள் தமிழ் மொழியிலும் வெளியிடப்படுவது தமிழக மக் களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

மேலும், தீர்ப்புகளின் மொழியாக்கத்தில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே மூத்ததும் – முதன்மையானதும் – இலக்கண இலக்கிய வளங்களைப் பெற்றுச் செழுமையானது மான செம்மொழித் தமிழை, உச்ச நீதிமன்றம் தவிர்ப்பது, உலகத் தமிழர்கள் மற் றும் மேலை, கீழை நாடுகளின் தமிழறிஞர்களுக்குப் பல்வேறு ஐயப்பாடுகளைத் தோற்றுவித்து விடும்.

எனவே, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் இந்த வர வேற்கத்தக்க சீரிய முயற்சியின் விளைவாகத் தமிழ் மொழியிலும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் கிடைத் திட வேண்டும். அந்த அரிய செய லைச் செய்து அவர் வரலாற்றில் சிறப்பான இடத்தைப்பெறவேண்டு மென்று, ஏழரைக் கோடித் தமிழக மக்களும் விரும்புகிறார்கள்.

ஆகவே உச்ச நீதிமன்றத் தீர்ப் புகள் வெளிவரும் மொழிப் பட்டிய லில் தமிழ் மொழியை அவசியம் சேர்த்திடுமாறு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு, தி.மு.க.வின் சார்பில் அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றேன் – என்றுள்ளது.

# மாநில மொழிகளுக்குள் தமிழுக்கு முன்னுரிமை

## உச்ச நீதிமன்ற வட்டாரங்கள் தகவல்

சென்னை, ஜூலை 05

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு களை மொழியாக்கம் செய்து வெளியிடும் திட்டத்தில், மாநில மொழிகளில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என நீதிமன்ற வட்டாரத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

உச்ச நீதிமன்றத்தில் ஆங் கிலத்தில் வெளியிடப்படும் தீர்ப் புகளை அனைத்து மாநிலங் களில் உள்ள மக்களும் தங்க ளின் மாநில மொழிகளில் தெரிந்துகொள்ள மொழியாக் கம் செய்து வெளியிடும் திட் டத்தை உச்ச நீதிமன்றம் கையாண்டு வருகிறது. இதற் காக புதிதாக மென்பொருள் ஒன்றையும் விரைவில் அறி முகம் செய்யவுள்ளது.

தீர்ப்புகளை மாநில மொழி களில்வெளியிடுவது, தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாயின் சிந் தனையில் உருவான முக்கிய மான திட்டமாகும்.

இதற்கான விண்ணப்பம் இம்மாத நடுப்பகுதியில் நடை முறைக்கு வரும் என எதிர்பார்க் கப்படுகிறது. கூகுள் எவ்வாறு மொழி பெயர்க்கிறதோ அதே போன்று இருக்கும் இந்த விண் ணப்பத்தை அனைத்து மாநில மொழிகளிலும் ஒரே கட்டத்தில் வெளியிட உச்ச நீதிமன்றம் திட்டமிட்டுள்ளது.

இது குறித்து ரஞ்சன் கோகாய் தெரிவிக்கையில், தீர்ப்புகளை ஹிந்தியில் மட்டு மல்லாது, அனைத்து மாநில மொழிகளிலும் வெளியிட வேண்டும். தீர்ப்புகளின் சுருக் கத்தையும் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்குவது நீண்ட காலமாக வழக்குக்காக காத்தி ருந்து போராடும் மனுதாரருக்கு உதவும். குறிப்பாக ஆங்கிலம் தெரியாமல், தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பதை அறியாமல் இருக்கும் மனு தாரருக்கு இந்த திட்டம் நன்கு உதவும் என்று தெரிவித்துள் ளார்.

இதனிடையே, மாநில மொழிகளில் தீர்ப்புக்கள் மொழியாக்கம் செய்து வழங் கப்படும் திட்டத்தில் தமிழ் மொழி இல்லை என்ற தகவல் வெளியானது. ஆனால், தமிழ் மொழியை கட்டாயம் சேர்க்க வேண்டும் எனக்கோரி அரசி யல் கட்சித் தலைவர்கள் அறிக்கை வெளியிட்டனர்.

எனினும், தீர்ப்புகளை ஆங் கிலத்தில் இருந்து மாநில மொழிகளில்மொழிபெயர்க்கும் திட்டத்தில் தமிழ் மொழிக்கே முன்னுரிமை இருக்கிறது என உச்ச நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ஐ)






2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில்



ரணிலைத் தோற்கடித்து மஹிந்தவை அரியாசனத்தில் ஏற்ற விடுதலை புலிகள் முடிவெடுத்தமை ஏன்?

★ பணம் வாங்கிக் கொண்டு அதற்கு கைம்மாறாக அந்த வேலையைப் புலிகள் செய்தார்களா?

★ கிடைத்த அரிய வாய்ப்பை ரணில் கோட்டை விட்டமை எங்ஙனம்?

★ இது தொடர்பான ஊடாட்டங்களில் மறைந்து கிடக்கும் இரகசியங்கள் யாவை?

விடயத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் வித்தியாதரன் புதிய தொடரில் மனம் திறக்கிறார்.

விரைவில் உங்கள் காலைக்கதிர் Kalaikathir இலத்திரனியல் பதிப்பில் ஆவலுடன் எதிர்பாருங்கள்.


# புனிதர் பட்டம் பெறும் கேரள கன்னியாஸ்திரி



கேரளாவைச் சேர்ந்த கன்னியாஸ்திரி மரியம் திரே சியாவுக்கு புனிதர் பட்டத்தை பாப்பரசர் பிரான்சிஸ், வத் திக்கானில் இடம்பெறவுள்ள சிறப்பு விழாவொன்றின் போது வழங்கவுள்ளார்.

கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் கன்னியாஸ்திரி மரியம் திரேசியா சிரமெல், திரிச்சூர் மாவட்டம், புத்தன்சிரா என்ற இடத்தில் 1876 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி பிறந் தார். தனது 50 ஆவது வயதில் குழிக்கட்டுசேரி என்ற இடத்தில் 1926ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 8 ஆம் திகதி மரணமடைந்தார்.

இவர் திருக்குடும்பக் கன்னியர் என்ற திருச்சபையை நிறுவியது டன், 12 ஆண்டுகளுக்குள் 3 புதிய கன்னியர் மடங்கள், 2 விடுதிகள், ஓர் ஆய்வு இல்லம், ஆதரவற் றோர் இல்லம் ஆகியவற்றை ஏற் படுத்திச் சாதனை படைத்தார். இவர் உருவாக்கிய திருக்குடும்பக் கன் னியர் திருச்சபையில் பயின்ற 1,500 க்கும் மேற்பட்ட சகோதரிகள் கேரளா, வட இந்தியா, ஜேர்மனி, இத்தாலி, கானா ஆகிய பகுதிகளில் பணியாற்றுகின்றனர்.

வத்திக்கானில் எதிர்வரும் ஒக் டோபர் மாதம் 13 ஆம் திகதி இடம் பெறவுள்ள விழாவில் மரியம் திரே சியாவுக்கு புனிதர் பட்டம் வழங்கப் படவுள்ளது. இதுகுறித்த அதிகா ரபூர்வ அறிவிப்பு வத்திக்கானில் நேற்று முன்தினம் வெளியிடப்பட் டுள்ளது.

(ஐ)

## வங்கப் பிரதமர் ஹசீனா மீது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது தாக்குதல்:

# 25 வருடங்களின் பின் நீதிமன்று மிகக் கடுமையான தீர்ப்பு 9 பேருக்கு மரண தண்டனை; 25 பேருக்கு ஆயுள் சிறை!

**டாக்கா,ஜூலை05**
**வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசீனா மீது தாக்குதல் நடத்திய 9 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. வங்காளதேசத்தில் அவாமி லீக் கட்சியின் தலைமையிலான ஆட்சி நடக்கிறது. ஷேக் ஹசீனா பிரதமராக இருக்கிறார். இவர் கடந்த 1991 முதல் 1996 வரையிலான காலக்கட்டத்தில் வங்காளதேச தேசிய கட்சியின் ஆட்சியின்போது, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.**



அப்போது ஆளும்கட்சிக்கு எதிராக நாடு தழுவிய பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ஷேக் ஹசீனா, 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி பிரசாரத்துக்காக டாக்காவில் இருந்து பாப்னா மாவட்டத்துக்கு ரயிலில் சென்றார்.

அந்த ரயில், பாப்னா ரயில் நிலையத்தை சென்றடைந்தபோது, வங்காளதேச தேசிய கட்சி மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை சேர்ந்த தொண்டர்கள் ஷேக் ஹசீனா இருந்த ரயில் பெட்டியை சூறையாடினர். ஷேக் ஹசீனா மீது சரமாரி தாக்குதல் நடத்தினர். எனினும் இதில் அவர் உயிர் தப்பினார்.

இதையடுத்து தாக்குதலில் ஈடுபட்டனர் என வங்காளதேச தேசிய கட்சி மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை சேர்ந்த தொண்டர்கள் 52 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு வந்தது. வங்காளதேச தேசிய கட்சியின் ஆட்சி காலத்தில் மிகவும் மந்தமாக நடந்து வந்த இந்த வழக்கு விசாரணை, 1996 ஆம் ஆண்டு அவாமி லீக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் சூடுபிடித்தது.

பொலிஸ் தரப்பு விசாரணை முடிந்ததும் 52 பேருக்கு எதிராக பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். அதன் பின்னர் பாப்னா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வந்தது. விசாரணையில் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 52 பேரில் 47 பேர் மீது குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட்டன.

### மேலும் 13 பேருக்கு பத்தாண்டுகள் சிறை

அதனைத் தொடர்ந்து நேற்று இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் 9 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. 25 பேருக்கு ஆயுள் தண்டனையும், 13 பேருக்கு 10 ஆண்டு சிறை தண்டனையும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார். தாக்குதல் நடந்த 25 ஆண்டுகளுக்குப் பிறகு நீதிமன்றம் இந்த அதிரடித் தீர்ப்பை வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.




# ஈராக்கில் வான்வழித் தாக்குதல்களில் 18 ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிரிழப்பு

பக்தாத், ஜூலை05

ஈராக்கில் பாதுகாப்பு படை நடத்திய வான்வழி தாக்குதலில் 18 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.



ஜோர்தான் மற்றும் சவுதி அரேபியா ஆகிய அண்டை நாடுகளுடன் எல்லைப் பகுதியை கொண்டிருக்கும் ஈராக்கின் அன்பர் பாலைவன பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து தீவிரமுடன் செயல்பட்டு வருகின்றனர்.

அவர்களைக் கட்டுக்குள் கொண்டு வர ஈராக் பாதுகாப்பு படை மற்றும் அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படைகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இந்நிலையில் அங்குள்ள ஆகாத் பகுதியில் பதுங்கு குழி மீது நடந்த வான்வழி தாக்குதலில் 4 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

சிரியாவின் எல்லையையொட்டிய கிழக்கு பகுதியில் நடந்த வான்வழி தாக்குதலில் 4 ஐ.எஸ். தீவிரவாதிகளும், மொசூல் நகரின் மேற்கே ஈராக் படையினரின் தாக்குதலில் 2 ஐ.எஸ். தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். அவர்களின் வாகனங்களும் சேதமடைந்தன.

சுரங்க பகுதியின் மீது நடந்த மற்றொரு வான்வழி தாக்குதலில் உள்ளே பதுங்கியிருந்த 5 ஐ.எஸ். தீவிரவாதிகள் பலியாகினர். சிரிய எல்லையை ஒட்டிய பாலைவன பகுதியில் அமெரிக்க கூட்டணி படையின் வான்வழி தாக்குதலில் 3 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டு உள்ளனர்.

2017 ஆம் ஆண்டு இறுதியில் நாடு முழுவதும் ஈராக் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட தீவிர வேட்டையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் முழுவதும் தோற்கடிக்கப்பட்டனர்.

எனினும் அவர்களில் மீதமுள்ளவர்கள் புறநகர் பகுதிகள் அல்லது பாலைவன பகுதிகள் மற்றும் கரடுமுரடான பகுதிகளில் தஞ்சமடைந்து கொண்டு பாதுகாப்பு படையினர் மீதும் மற்றும் பொதுமக்கள் மீதும் அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

# திருட்டுத்தனமாக விமானத்தில் பயணித்தவர் வானத்தில் இருந்து நிலத்தில் விழுந்து சாவு!

### பிரிட்டனில் பரபரப்புச் சம்பவம்

லண்டன், ஜூலை05

பிரிட்டன் தலைநகர் லண்டனில், ஒருவர் பறக்கும் விமானத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கென்யா நாட்டின் நைரோபி நகரத்திலிருந்து, லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்திற்கு கென்யா ஏர்வேஸ் நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் வந்து கொண்டிருந்தது. இந்த விமானம், லண்டன் வான்பரப்புக்குள் பயணம் செய்த போது, கிளாபம் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் தோட்டத்தில் விமானத்தில் பயணம் செய்த நபர் விழுந்து உயிரிழந்துள்ளார்.

வீட்டின் தோட்டத்தில் ஒருவர் இரத்த வெள்ளத்தில் உயிரிழந்து கிடக்கின்றமையைக் கண்டு அதிர்ச்சியடைந்த, தோட்டத்தின் உரிமையாளர், காவல்துறைக்குத் தகவல் அளித்துள்ளார்.

விமானத்தின் தரையிறங்கும் கியர் பெட்டியில் ஒரு பை, தண்ணீர் மற்றும் உணவைக் கண்டுபிடித்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர். அந்நபர் அங்கேயே ஒளிந்துகொண்டு நடுவானில் விமானத்திலிருந்து விழுந்திருக்கலாம் என்று விமான ஊழியர்கள் தரப்பில் சொல்லப்படுகிறது.

விமானத்தில் திருட்டுத்தனமாக பயணித்து உயிரிழந்த நபரை அடையாளம் காண உதவுமாறு கென்யா உயர் அதிகாரிகளை லண்டன் காவல்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# ஜப்பானில் கொட்டித் தீர்க்கும் மழை 8லட்சம் பேரை இடம்பெயர உத்தரவு



டோக்கியோ, ஜூலை05

ஜப்பானில் கொட்டி தீர்க்கும் கனமழையால் 8 லட்சம் பேரை அவர்களின் இடங்களிலிருந்து வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

ஜப்பானின் தென்மேற்கு பகுதியில் கியூஷு தீவில் உள்ள ககோஷிமா பிராந்தியத்தின் தலைநகர் ககோஷிமாவில் கடந்த ஒரு வார காலமாக இடைவிடாது கனமழை கொட்டி வருகிறது. இதுவரை அங்கு 1,000 மி.மீ. மழை பெய்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் காலை 8 மணி வரை ஒரு மணி நேரத்தில் மட்டுமே 40 மி.மீ மழை பெய்து இருக்கிறது. நேற்று (வியாழக்கிழமை) காலைக்குள் தெற்கு கியூஷுவில் சுமார் 350 மி.மீ. மழை பெய்யும் என ஜப்பான் வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

# பாகிஸ்தானில் படகு கவிழ்ந்ததில் 30 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்

**பெஷாவர், ஜூலை05**

**பாகிஸ்தானில் படகு கவிழ்ந்ததில் 30 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.**

**பாகிஸ்தானின் வடமேற்கே கைபர் பக்துன்குவா மாகாணத்தின் ஹரிப்பூர் மாவட்டத்தின் தர்பேலா பகுதியில் ஆற்றில் படகு ஒன்று சென்று கொண்டிருந்தது. இதில் தோர்கார் மாவட்டத்தின் நல அமேஜை கிராமத்தில் வசித்து வந்த 80 பேர் பயணம் செய்தனர்.**

**அவர்கள் ஹரிப்பூர் நோக்கி சென்றபொழுது திடீரென படகு நடுவழியில் கவிழ்ந்தது. இதில் பெண்கள் மற்றும் 4**



**குழந்தைகள் உள்ளிட்ட 30 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். மீட்பு படையினரால் அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு விட்டன. 15 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். அதிக எடையால் படகு விபத்தில் சிக்கியுள்ளது என பொலிஸார் தெரிவித்து உள்ளனர்.**

# மின்னிதழாக காலைக்கதிர்; காலத்துக்கேற்ற மாற்றம்

## என்னை நிந்திப்பார்; மறுநாள் புகழ்ந்து எழுதுவார் வித்தியாதரன் அவரின் பாணி பிடித்திருக்கிறது

**காலைக்கதிர் பத்திரிகை இப்போது ஒரு மின்னிதழாக - மின் பத்திரிகை என்ற வடிவத்தில் வருகின்றது. இது காலத்துக்கேற்ற மாற்றமே. ஊடகத்துறையில் இது ஒரு புரட்சியே. இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் குறிப்பிடுகின்றார். வித்தியாதரனின் அறுபதாவது அகவையையொட்டி அவர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.**

**அந்தச் செய்தியில் -**

தமிழ் ஊடகத்துறையில் திரு.வித்தியாதரனுக்குதனியானஓர்இடமிருக்கின்றது. கடுமையான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், தடுப்புக்காவல் என்பவற்றுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக ஊடகப்போராளியாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவர் அவர். அவர் எதிர்கொண்ட ஆபத்துக்கள், இழப்புக்கள் அதிகம். அவற்றுக்கு மத்தியிலும் தன்னுடைய பணியில் உறுதியுடன் அவர் பயணித்து வருகின்றார்.



ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் ஊடகங்களின் பங்களிப்பும் முக்கியமானது. தமிழ் ஊடகங்கள் மட்டுமன்றி, தமிழ் ஊடகவியலாளர்களும் ஆட்சியாளர்களால் இலக்கு வைக்கப்படும் சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன. வித்தியாதரனை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகைகள் கூட உதயன், சுடரொளி ஆகியன பல சந்தர்ப்பங்களில் தாக்குதலுக்குள்ளாகியிருக்கின்றன. உயிர்ப்பலிகளும் அங்கு இடம்பெற்றிருக்கின்றன.

ஆனால், இவற்றுக்கு மத்தியிலும் அதே வீச்சுடன், அதே உறுதிப்பாட்டுடன் தமது பத்திரிகையைக் கொண்டுவர வேண்டும் என்பதில் வித்தியாதரன் விடாப்பிடியாக இருந்திருக்கின்றார். சரியானசெய்தியைவெளிக்கொண்டுவருவதற்காக எதற்கும்அஞ்சாதஒருவராகவேஅவர்பணியாற்றி வந்துள்ளார். அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி சமரசம் செய்யும் ஓர் ஊடகவியலாளராக அவர் ஒருபோதும் இருந்ததில்லை.

ஊடகத்துறை இப்போது ஒரு நெருக்கடியை எதிர்கொண்டிருக்கின்றது. மக்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்துவருகின்றது. சமூக ஊடகங்கள் அதிகளவுக்குச் செல்வாக்கைச் செலுத்துகின்றன. பத்திரிகைகளுக்கு இருந்த இடத்தை சமூக ஊடகங்கள் பெற்றுக்கொண்டுள்ளன. இந்த மாற்றத்துக்கு வித்தியாதரனும் ஈடுகொடுக்கின்றார் போல் தெரிகிறது. அவரது பத்திரிகை இப்போது ஒரு மின்னிதழாக அல்லது மின்பத்திரிகை என்ற வடிவத்தில் வருகின்றது. அதாவது, அச்சுத்தாள் இல்லாமலே அந்தப் பத்திரிகை இப்போது வாசகர்களைச் சென்றடைகின்றது. நள்ளிரவில் நான் கண்விழித்து எழும் போது வித்தியாதரனின் காலைக்கதிர் மின் பத்திரிகையே எனக்கு நடந்தவை நடப்பவை பற்றி செய்திகளைத் தருகின்றது.

ஊடகத்துறையில் இது ஒரு புரட்சிதான். காலை எழுந்தவுடன் தேநீருடன் பத்திரிகை படிக்கும் பழக்கம் எம்மவர் பலருக்கும் உள்ளது. ஆனால், கடைக்குச்செல்லாமல்வீட்டிலிருந்தவாறே அதிகாலையில் வித்தியாதரனின் காலைக்கதிரை இப்போதெல்லாம் படிக்க முடிகின்றது. எமது மின்னஞ்சல் உள்பெட்டிக்குள் அதிகாலை 1.30 மணிக்கு முன்னதாகவே காலைக்கதிர் வந்து) காத்துக்கொண்டிருக்கின்றது. உள்நாட்டு, உலக நடப்புக்களை மட்டுமன்றி செய்திகளின் பின்னணியில் இருக்கக் கூடிய தகவல்களையும் அறிய முடிகின்றது. தகவல் யுகத்தில் ஒரு முக்கிய திருப்பம் இது எனலாம்.

இதிலுள்ள மற்றொரு முக்கியமான அம்சம் என்னவென்றால், தாயகத்தில் மட்டுமன்றி, புலம்பெயர்தேசங்களில்வாழும் தமிழர்களையும்ஒரேநேரத்தில்சென்றடையும் பத்திரிகையாக காலைக்கதிர் மட்டுந்தான் இருக்கின்றது என நம்புகின்றேன்.

அதிகாலை 1.00 மணிக்கே எழுந்து எனது கடமைகளை ஆரம்பிப்பது எனது வழமை. முதல்வேலையாக காலைக்கதிரைப் படித்து நாட்டு நிலைமைகளை அறிந்து கொள்ளாமல் அடுத்த வேலையைத் தொடர முடியாது என்பது எனக்குப் பழக்கமாகி விட்டது. பிரத்தியேகச் செய்திகள், முந்தி வரும் பிந்திய செய்திகள், காத்திரமான ஆசிரியர் தலையங்கம், அரசியலின் உள்ளகத் தகவல்களை சுவாரஸ்யமாகத் தரும் இனி இது இரகசியம் அல்ல என்ற பகுதி (அதைத் தான் முதலில் படிப்பேன்!) ஆகியன காலைக்கதிர் பத்திரிகைக்கு கனம் சேர்ப்பவை. / இவற்றில் வித்தியாதரன் முத்திரை பதிந்திருப்பதைக் காணலாம். மிகக் குறுகிய காலத்தினுள் அவர் அந்தப் பத்திரிகைக்கு ஓர் அந்தஸ்தை ஏற்படுத்தி விட்டார்.

சமூகத்துக்குத் தேவையான செய்திகளைத் தருவதுடன், மக்கள் மத்தியில் ஒரு கருத்துருவாக்கத்தை ஏற்படுத்துவதிலும் வித்தியாதரன் கணிசமான பங்களிப்பை அன்று முதல் இன்று வரை செய்துவருகின்றார். பத்திரிகை ஒன்றுக்கு இருக்க வேண்டிய முக்கியமான சமூகப் பணி அதுதான்.

இப்போது, போர் முடிவடைந்துவிட்டதாகச் சொல்லப்பட்டாலும், மறைமுகமான போர் ஒன்று பல்வேறு வடிவங்களில் எமது சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதுதான் மிகவும் ஆபத்தானது. காணிகள் பறி போகின்றன, வளங்கள் சூறையாடப்படுகின்றன, கலாசாரம் சீரழிய வழிவகுக்கப்படுகிறது, போதைப் பொருள்களால் இளைய சமுதாயம் திசை திருப்பப்படுகின்றது, வெளி மதங்கள் இங்கு வேரூன்ற இராணுவத்தினர் பக்கபலமாக இருந்து உதவி சேர்க்கின்றார்கள். இவற்றை எதிர்கொள்வதற்கு மக்களுக்கான வழிகாட்டிகளாகச் செயற்பட வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கும் உள்ளது. திரு.வித்தியாதரன் அதனைச் திறம்படச் செய்துவருகின்றார் என்பதில் சந்தேகமில்லை. ஒரு நாள் என்னை நிந்திக்கும் வகையில் எழுதுவார். மறுநாள் புகழுவார், அவர் பாணி எனக்குப் பிடித்துள்ளது. நிந்தனையும் புகழ்ச்சியும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் என்பதை அறிந்தவன் நான்.

**இன்று அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்யும் வித்தியாதரன் அவர்கள் ஊடகப் பணியில் தொடர்ந்தும் வெற்றிகரமாகச் செயற்பட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.**

அவருக்கு நடைமுறை அரசியலில் ஒரு நாட்டம் இருப்பதை நான் அறிவேன். அவரின் இலௌகீக அபிலாகைள் யாவும் இறைவனால் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொள்கின்றேன். அவரின் அறுபதாவது அகவை விழாவில் முன்னைய சந்திப்பு ஏற்பாடுகளின் நிமித்தம் கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துகின்றேன். -என்றுள்ளது.

## வடக்கு விவசாய திணைக்களப் பிரச்சினை;
# விசாரணை அறிக்கை அடிப்படையில் சம்பந்தப்பட்டோரின் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 05

கடந்த மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற வடமாகாண விவசாய திணைக்கள கணக்காய்வுக் கூட்டத்தின்போது ஏற்பட்ட சம்பவம்தொடர்பில்விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரை ஆளுநர் பணித்திருந்தார். அந்த அறிக்கை தற்போது ஆளுநருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது எனவும், அந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்டோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் வடக்கு ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட அந்தச் சம்பவத்தில் சிறுபான்மை இனப் பெண் அதிகாரியொருவர் தாக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கும்ஆளுநர்,இவ்வாறான சம்பவங்கள் இனி வடக்கு மாகாணத்தில் இடம்பெறாத வகையில் முன்னெடுக்கக் கூடியதான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, போராட்டங்கள், ஊர்வலங்களை மேற்கொண்டு தன்மீது எவரும் அழுத்தங்களைப்பிரயோகிக்க முடியாது எனவும் ஆளுநர் குறிப்பிட்டதுடன், பொதுமக்களுக்குச் சேவையை வழங்க வேண்டிய அலுவலக நேரத்தில் அரச உத்தியோகர்கள் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

அலுவலக நேரத்தில் முறையான விதிமுறைகளைக் கடைப்பிடிக்காது ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்களில் ஈடுபடும் வடமாகாண நிர்வாகத்திற்கு உட்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையானநடவடிக்கைமேற்கொள்ள விருப்பதாகவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் சிரமதானம்

## பொங்கல் ஏற்பாடுகள் பூர்த்தி



முல்லைத்தீவு, ஜூலை 05

முல்லைத்தீவு மாவட்டத்தின் பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை இடம்பெறவுள்ள வருடாந்த பொங்கல் உற்சவத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ள நிலையில் நேற்றுச் சிரமதானப் பணி உள்ளிட்ட இதர வேலைகளில் ஆலயத் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

நாளை அதிகாலை 3 மணிக்கு கோட்டக் கேணிப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் ஆண்டு உற்சவம் மிகச் சிறப்பாக இடம்பெற இருக்கின்றது.

நேற்றுக் காலை முதல் ஆலய வளாகத்தில் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, செம்மலை, அளம்பில் பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் சிரமதானப் பணி உள்ளிட்ட ஏனைய வேலைகளில் ஈடுபட்டனர். (ஐ)



# பொலிஸார் மீது தாக்குதல்!

மட்டக்களப்பு, ஜூலை 05

மட்டக்களப்பு, புதூர் பகுதியில் இரு போக்குவரத்துப் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதன்போது ஒரு பொலிஸாரின் ஆயுதமும் பறித்துச் செல்லப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டுத் தேடுதல் நடைபெற்றது.

இளைஞர் ஒருவரை இரண்டு போக்குவரத்துப் பொலிஸார் துரத்திச் சென்று பிடிக்க முற்பட்ட போது அந்த இளைஞன் விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அப்பகுதியில் நின்ற இளைஞர்களுக்கும் போக்குவரத்துப் பொலிஸாருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அதன் பின்னர் அங்கு நின்ற சிலரால் போக்குவரத்துப் பொலிஸார் இருவரும் தாக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது போக்குவரத்துப் பொலிஸார் ஒருவரின் கைத்துப்பாக்கி பறித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

பொலிஸார் அப்பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் தொடர் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## ஆஸியில் தமிழ்ப் பெண்ணை குத்திக் கொன்றார் கணவன்!

மெல்பேர்ண், ஜூலை 05

ஆஸ்திரேலியாவில் தமிழ்ப்பெண் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். அவரது கணவரே இந்தக் கொலையைச் செய்துள்ளார். கடந்த திங்களன்று இரவு 10 மணியளவில் இந்த சம்பவம் நடந்தது.

தம்பதியர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் இடம்பெற்ற பின்னர் கணவரே பொலிஸாரை அழைத்தார் என்று குயின்ஸ்லாந்து பொலிஸார் கூறினர்.

படுகொலையான தேவகி என்ற 52 வயது குடும்பப் பெண் குயின்ஸ்லாந்து பகுதியில் தனது கணவருடன் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வந்துள்ளார். சமூகத்தொண்டுகளை மேற்கொள்வதில் மிகுந்த ஆர்வமுடையவர் என்றும், சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் இவர்கள் இருவரும் தம்பதியினராக தென்கிழக்கு ஆசிய நாடொன்றுக்கு விடுமுறையில் சென்று திரும்பியிருந்தார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. கணவர் தற்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## அமெரிக்க உடன்பாட்டுக்கு எதிராக நீதிமன்று செல்கிறது கூட்டு எதிரணி

**கொழும்பு, ஜூலை 05**
**அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனத்துடன் இலங்கை அரசு உடன்பாடு செய்து கொள்வதற்கு எதிராக, மஹிந்த ராஜபக்‌ஷ தலைமையிலான கூட்டு எதிரணி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது.**

### மஹிந்தானந்த அளுத்கமகே தகவல்



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நெறிமுறையற்ற உடன்பாடுகளை அடுத்த 90 நாட்களுக்குள் அங்கீகரிக்க அரசு முயற்சிக்கிறது.

இந்த உடன்பாடுகளை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்க அரசு முற்படும் போது, கூட்டு எதிரணி அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்.

சோபா உடன்பாடு, கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவை உடன்பாடு மற்றும் மிலேனியம் சவால் நிதிய உடன்பாடு ஆகியவற்றைத் தவிர, ஒரு சமஷ்டி அரசமைப்பை கொண்டு வரவும் அரசு முயற்சிக்கும், இது நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் – என்றார். (ஐ)

## சஹ்ரானின் போதனையில் பங்கேற்றவருக்கு பிணை!

அம்பாறை, ஜூலை 05

தடை செய்யப்பட்ட தேசிய தௌஹித் ஜமாத்தின் மார்க்க போதனை நிகழ்வில் கலந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

சந்தேகநபரை கைது செய்தமையை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட மனு நேற்றுமுன் தினம் கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஐ.என்.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது அந்த நபர் மீதான வழக்கை பயங்கரவாததடைச்சட்டத்தின் கீழ் முன்னெடுப்பதற்கான காரணம் எதுவும் இல்லை என பொலிஸ் தரப்பினால் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரிய சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், அதற்கான நியாயங்களை முன்வைத்து வாதிட்டனர்.

இவற்றைச் செவிமடுத்த நீதிவான் சந்தேகநபரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டதுடன், இவ்வழக்கு முடியும்வரை ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் கல்முனை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடவேண்டும் எனப் பணித்ததுடன், வெளிநாட்டு பயணங்களுக்கும் தடையுத்தரவு பிறப்பித்தார். (ஐ)

## புலிகளுடன் போதைப்பொருளை தொடர்புபடுத்திப் பேசமுடியாது!

### மைத்திரியைக் கண்டிக்கிறார் வியாழேந்திரன்



மட்டக்களப்பு, ஜூலை 05

தமிழ் இனத்தின் விடுதலையை மாத்திரம் உயிராக நினைத்துப் போராடிய விடுதலைப் புலிகளுடன் போதைப் பொருளை தொடர்புபடுத்தி ஜனாதிபதியோ, வேறு யாரும் தரக்குறைவாகப் பேச முடியாது. அவ்வாறு பேசுவது ஒட்டு மொத்த தமிழினத்தையே அவமதிக்கும் செயலாகவே நான் பார்க்கிறேன் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்–

உயிரைத் துச்சமாக மதித்து, கழுத்திலே நஞ்சுக்குப்பியை அணிந்து கொண்டு போராடிய விடுதலைப்புலிகள் வாயில் புகைத்தலையோ, மதுவையோ, விளையாட்டாகவும் வைத்து பார்க்காதவர்கள். அவர்கள் கனவிலும் போதை பற்றி நினைத்து பார்க்காதவர்கள். இன விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டவர்கள். அவர்களது கட்டுப்பாட்டு பகுதிகளில் சாதாரண போதைப் பொருள் பாவனைக்கே இடமளிக்காதவர்கள். அவர்கள் போதைப் பொருள் விற்பனை செய்தார்கள் என்ற கருத்தை துளியளவும் ஏற்க முடியாது.

புலம்பெயர் உறவுகளின் உழைப்பும், அது மாத்திரமல்ல விடுதலைப் புலிகள் தங்களுக்குத் தேவையான உணவு சார்ந்த பொருள்கள் உட்பட பலவற்றை தாங்களே உற்பத்தி செய்து தயாரித்தும் பெற்றுக்கொண்டார்கள். விடுதலைப் புலிகள் காலத்தில் தமிழ்ப் பகுதிகளில் போதைப்பாவனை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இருந்தது . தவறி யாராவது சாதாரண போதைப் பொருள் பாவனையில் பாவித்தாலும் அவர்களும் கட்டுப்படுத்தப்பட்டார்கள். ஆகவே ஜனாதிபதி மட்டுமல்ல யாருமே விடுதலைப் புலிகள் மீது போதை என்ற சொல்லையே பயன்படுத்த முடியாது – என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## 8 வயது மாணவிக்கு துன்புறுத்தல்:

## ஆசிரியரின் பிணை விண்ணப்பத்தை நிராகரித்தது பருத்தித்துறை நீதிமன்று

யாழ்ப்பாணம், ஜூலை 05

பருத்தித்துறை புனித தோமையார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் 8 வயது மாணவியைப் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியர் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று நிராகரித்தது.

பொலிஸாரின் புலன் விசாரணைகள் நிறைவடையாத நிலையில் சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் நளினி சுதாகரன், சந்தேகநபரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பருத்தித்துறை புனித தோமையார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையில் தரம் 3இல் கல்வி பயிலும் 8 வயது மாணவியை மலசலகூடத்துக்குள் வைத்து பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு ஆசிரியர் உட்படுத்தினார் என்று பொலிஸாரால் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

சம்பவம் மே மாதம் 27ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.எனினும் மாணவியின் பெற்றோருக்கு தெரியவந்ததையடுத்தே பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது. அதனடிப்படையில் மாணவியிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார், அவரை மந்திகை வைத்தியசாலையில் பரிசோதனைக்காகச் சேர்த்தனர்.

அத்துடன், மாணவியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் வியாபாரிமூலையைச் சேர்ந்த 46 வயதுடைய ஆசிரியர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வரை தொடர்ச்சியாக இரண்டு தடவைகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி, பிணை கோரி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

வழக்கில் சட்ட மருத்துவ அதிகாரியால் வழங்கப்பட்ட மருத்துவச் சோதனையில் சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியமைக்கான ஏதுக்கள் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் சந்தேகநபருக்குப் பிணை வழங்கவேண்டும் என்று சட்டத்தரணி சமர்ப்பணம் செய்தார்.

எனினும் சந்தேகநபருக்கு பிணை வழங்கப் பொலிஸார் கடும் ஆட்சேபனை தெரிவித்தனர்.

இருதரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதிவான் நளினி சுதாகரன், பொலிஸாரின் புலன் விசாரணைகள் நிறைவடையும் வரை சந்தேகநபரைப் பிணையில் விடுவிக்க முடியாது என்று அவர் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை நிராகரித்தார். அத்துடன், சந்தேகநபரை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தையடுத்து பருத்தித்துறை புனித தோமையார் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் அதிபரையும் குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியரையும் உடனடியாக பதவியிலிருந்து இடைநிறுத்துமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், மாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரயிலில் யாசகம் பெற்ற பெண்ணிடம் 3 வீடுகள், வங்கியில் 5 லட்சம் ரூபா!

கொழும்பு, ஜூலை 05

ரயில்களில் யாசகம் பெற்று வந்த கண் பார்வையற்ற 65 வயதுடைய பெண் ஒருவர், சொந்தமாக 3 வீடுகளை வைத்திருப்பதும், அவரது வங்கிக் கணக்கில் ஐந்து இலட்சம் ரூபா பணம் இருப்பதும், தெரியவந்துள்ளது. ரயில்வே பொலிஸாரால் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்த தகவல்கள் அம்பலமாகின.

கம்பஹா நகரில் உள்ள ரயில் நிலையங்களில் கடந்த 25 வருடங்களாக யாசகம் பெற்று வந்த இந்த வயோதிபப் பெண் அதன் மூலம் கிடைத்த பணத்தில் குறித்த 3 வீடுகளையும் கட்டியதாகத் தெரிவித்துள்ளார். அவற்றில் 2 வீடுகளை அவரது மகள்களுக்கு வழங்கியுள்ளார் எனவும் கவும் மூன்றாவது வீட்டை வாடகைக்கு விட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அவர் கம்பஹா மற்றும் கோட்டை ரயில் நிலையங்களுக்கிடையில் யாசகம் பெற்று வருவதாகவும் நாள் ஒன்றுக்கு சுமார் 4000 ரூபாவும் மாதத்துக்கு 150,000 ரூபா பெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவர் யாசகம் பெறுவது தனது மகள்களுக்கும் தெரியும் என்றும், அவரது மருமகன்கள் நல்ல வேலைகளில் உள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை அவரைக் கைது செய்த நிலையில் அவரது மகள்களில் ஒருவர் வந்து அவரைப் பார்த்துச் சென்றார் எனப் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அவரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பொலிஸ் வட்டாரங்கள் தெரி வித்தன. (ஐ)





# நியூஸிலாந்து அணியை வீழ்த்தி அரையிறுதிக்குள் இங்கிலாந்து!

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 41ஆவது போட்டியில், இங்கிலாந்து அணி 119 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், இங்கிலாந்து அணி மூன்றாவது அணியாக அரையிறுதிக்குள் நுழைந்தது.

நேற்று முன் தினம் செஸ்டர் லீ ஸ்ட்ரீட் – ரிவர் சைட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், இங்கிலாந்து அணியும், நியூஸிலாந்து அணியும் களமிறங்கின.

அரையிறுதிக்கான வாய்ப்பை உறுதி செய்ய வேண்டி, இரண்டு அணிகளும் இப்போட்டியில், போட்டியிட்டன.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, சிறப்பான ஆரம்பத்தை பெற்றுக்கொண்டது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான ஜேஸன் ரோய்யும், ஜோனி பேயர்ஸ்டொவ்வும் இணைந்து ஆரம்ப விக்கெட்டுக்காக 123 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

இதன்போது ஜேஸன் ரோய் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய ஜோ ரூட் 24 ஓட்டங்களை பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார்.

இதன்பிறகு களமிறங்கிய ஜோஸ் பட்லர் 11 ஓட்டங்களுடன் ஏமாற்ற, அடுத்து களமிறங்கிய ஓய்ன் மோர்கன் சற்று ஆறுதல் அளிக்கும் வகையில், 42 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக் கொடுத்துவிட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய பென் ஸ்டோக்ஸ் 11 ஓட்டங்களுடனும், கிறிஸ் வோக்ஸ் 4 ஓட்டங்களுடனும், அடில் ராஷிட் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க, ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ஜோனி பேயர்ஸ்டொவ் 106 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக்கொடுத்தார்.

இதற்கமைய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 305 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சு சார்பில், ட்ரென்ட் போல்ட், மெட் ஹென்றி மற்றும் ஜேம்ஸ் நீஸம் ஆகியோர் 2 விக்கெட்டுக ளையும், மிட்செல் சான்ட்னர் மற்றும் டிம் சவுத்தீ ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் ட்ரென்ட் போல்ட், 2 விக்கெட்டினை வீழ்த்தியதன் மூலம், உலகக்கிண்ண வரலாற்றில் நியூஸிலாந்து அணி சார்பில், அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளராக அவர் தனது பெயரை முத்திரை பதித்துக் கொண்டார்.

அவர் நடப்பு உலகக்கிண்ண தொடரில் இதுவரை 15 விக்கெட்டுகளை வீழ்த்தி யுள்ளார். ஒட்டு மொத்தமாக இது வரை 37 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இதுவரை உலகக்கிண்ண வரலாற்றில் நியூஸிலாந்து அணி சார்பில், யாரும் 37 விக்கெட்டுகளை வீழ்த்தி யது கிடையாது.

இதனைதொடர்ந்து, 306 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி, ஆரம்பமே சற்று தள்ளாட்டத்தை எதிர்கொண்டது.

நியூஸிலாந்து அணி, முதல் ஓவரின் இறுதி பந்திலேயே தனது முதல் விக்கெட்டை இழந்தது. அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ஹென்றி நிக்கோல்ஸ் ஓட்டமெதுவும் பெறாத நிலையில், தனது முதல் பந்திலேயே கிறிஸ் வோக்ஸின் பந்து வீச்சுக்கு எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன்பிறகு களமிறங்கிய அணித் தலைவர் கேன் வில்லியம்சன் சற்று தாக்குபிடிக்க, மற்றொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மார்டின் கப்டில் 8 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து, களமிறங்கிய அனுபவ வீரர் ரோஸ் டெய்லர், கேன் வில்லியம்சனுடன் இணைந்து நிதான துடுப்பாட்டத்தை கடைபிடித்த போதும், இவர்களின் இணைப்பாட்டம் நெடுநேரம் நீடிக்கவில்லை.

இருவரும் இணைந்து 47 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்த வேளை, கேன் வில்லியம்சன் துரதிஷ்டவசமாக ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன்பிறகு களமிறங்கிய டொம் லதம் சற்று களத்தில் தாக்குபிடிக்க, மறுபுறம் நிதான துடுப்பாட்டத்தை கடைபிடித்து வந்த ரோஸ் டெய்லர் 27 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை, ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து களமிறங்கிய சகலதுறை வீரர் ஜேம்ஸ் நீஸம், டொம் லதமிற்கு சற்று ஒத்துழைப்பு வழங்க இருவரும் 54 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தனர்.

ஜேம்ஸ் நீஸம், 19 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்து வெளியேற, இறுதியாக நம்பிக்கையளிக்கும் வீரராக எதிர்பார்க்கப்பட்ட கொலின் டி கிராண்ட்ஹோமும் 3 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

இதன்பிறகு அணியின் ஓட்டங்களை அதிகரித்து வந்த டொம் லதமும் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அணியின் வெற்றி கனவு கலைந்து போனது.

அத்தோடு அடுத்தடுத்து களமிறங்கிய எந்த வீரர்களும் அணிக்கு சிறப்பான ஓட்டங்களை பெற்றுக்கொடுக்கவில்லை.

மிட்செல் சான்ட்னர் 12 ஓட்டங்களுடனும், டிம் சவுத்தீ மற்றும் மெட் ஹென்றி ஆகியோர் 7 ஓட்டங்களுடனும், ட்ரென்ட் போல்ட் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமி



ழக்க, நியூஸிலாந்து அணி 45 ஓவர்கள் நிறைவில் 186 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இங்கிலாந்து அணி 119 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.


1983ஆம் ஆண்டுக்கு பிறகு உலகக் கிண்ணத் தொடரில், நியூஸிலாந்து அணியை இங்கிலாந்து அணி வீழ்த்தியுள்ளது. (ஐ)

# தேசிய குத்துச்சண்டையில் வடக்குக்கு 19 பதக்கங்கள்!



தேசிய ரீதியில் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் கலந்து கொண்ட வடக்கைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் 19 பதக்கங்களை வென்று வடக்கு மாகாணத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் மாத்தறை மாவட்டத்தில், அக்குறஸ்ஸ பகுதியில், அத்துருகிரிய பிரதேச சபை மண்டபத்தில் கடந்த 28ஆம், 29ஆம், மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் வவுனியா, பதுளை, கண்டி, மாத்தறை, குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 250 குத்துச்சண்டை வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



இலங்கை பிரான்ஸ் 'சவேட்' அமைப்பின் ஏற்பாட்டில் தேசிய மற்றும் சர்வதேசகுத்துச்சண்டைப் பயிற்றுநர் மற்றும் இலங்கை பிரான்ஸ் 'சவேட்' தேசிய கூட்டமைப்பின் தலைவருமான பிரசாத் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணத்தைப் பிரதிபலித்து வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

வவுனியா ஏழாம் அறிவு தற்காப்பு கலைச் சங்கத்தின் தலைவரும், வடமாகாண குத்துச்சண்டை (கிக் பொக்சிங்) பயிற்றுவிப்பாளருமான எஸ்.நந்தகுமார் தலைமையில் சென்ற வீரர், வீராங்கனைகள் குத்துச்சண்டையில் கலந்துகொண்டு 11 தங்கப் பதக்கங்களையும், ஐந்து வெள்ளிப் பதக்கங்களையும், மூன்று வெண்கலப் பதக்கங்களையும் வென்று வட மாகாணத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

அத்துடன் அகில இலங்கை ரீதியில் குத்துச்சண்டையில் (கிக் பொக்சிங்) வடமாகாணம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் அதற்கான கேடயத்தை பிரான்ஸ் 'சவேட்' தேசிய கூட்டமைப்பின் தலைவர் பிரசாந் விக்கிரமசிங்க வழங்க வட மாகாண கிக் பொக்சிங் பயிற்றுவிப்பாளர் எஸ்.நந்தகுமார் பெற்றுக் கொண்டார்.

வவுனியா அகில இலங்கை தமிழ் திருச்சபை கலவன் பாடசாலை, கோவில்குளம் இந்துக்கல்லூரி, பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி, வவுனியா காமினி மகா வித்தியாலயம், மடுக்கந்த சிறிசுமண சிங்கள வித்தியாலயம், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், முல்லைத்தீவு முத்தையன்கட்டு வலதுகரை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் 19 பேர் கலந்துகொண்டு 19 பதக்கங்களை பெற்று வடமாகாணத்திற்கும் அவர்களுடைய பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். (ஐ – 100)

**இன்றைய ஆட்டம்**

(பிற்பகல் 3 மணி)

பாகிஸ்தான் VS பங்களாதேஷ்

ICC CRICKET WORLD CUP ENGLAND & WALES 2019

## பாடசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் பொலிஸார் நடத்திய விசாரணையின்போது, பாடசாலையில் சுகயீனமுற்ற மாணவனைப் பார்க்க வந்த அவரின் தந்தையே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

பிரதீப் உதயகுமாரா (31) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பாடசாலையின் ஆரம்பப் பிரிவில் இறந்தவரின் பிள்ளை படித்து வருகிறது. குழந்தைக்கு உடல் நிலை சரியில்லாததால், அழைத்து செல்வதற்காக அவர் பாடசாலைக்கு வந்துள்ளார்.

பாடசாலையின் முதலாவது கதவை அவர் திறந்து உள் நுழைந்தபோது, அவரை உள்ளே நுழையவேண்டாமென காவல் கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய் அறிவுறுத்தியுள்ளார். பிரதீப் உதயகுமார அந்த உத்தரவைச் செவிமடுக்காமல் செயற்பட, சிப்பாய்க்கும் அவருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

சிப்பாயின் உத்தரவை மீறிப் பாடசாலையின் இரண்டாவது கதவையும் திறந்தபோதே, அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

படுகாயமடைந்தவர் ஓட்டோ ஒன்றில் காலி கராப்பிட்டிய வைத்தி சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பின்னர் நோயாளர் காவு வண்டிக்கு மாற்றப்பட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

உயிரிந்தவர் கடற்படையில் முன்னர் பணியாற்றியவர் என தெரிகிறது.

இந்தச் சம்பவத்தால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. பெற்றோர் பாடசாலையில் குவிந்து, தமது பிள்ளைகளை அழைத்துச் சென்றனர். (ஐ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் செயற்பாட்டின்போது, காணி உரிமையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டு காணிகள் அளவிடும் பணிகள் நடைபெற்றன.

காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகையை உள்ளடங்கிய 62 ஏக்கர் காணிப் பகுதியிலுள்ள தனியார் காணிகளை இனம்கண்டு, பொதுமக்களிடம் வழங்கவுள்ளதாக ஆளுநர் அண்மையில் அறிவித்திருந்தார். இதன்படி, காணி உரிமையாளர்களை நேற்று அளவீட்டுப் பணிகளுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

காணிகளை நான்கு வலயங்களாக பிரித்து நேற்றும், இன்றும் எதிர்வரும் திங்கட்கிழமையும் அளவீட்டுப் பணிகள் நடக்கவுள்ளன.

இதன்படி நேற்றுக் காணி உரிமையாளர்கள், கடற்படையினரால் பதிவு செய்யப்பட்டு காணிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பொதுமக்களின் அடையாள அட்டைகள் பதிவு செய்யப்பட்டு, கையடக்கத் தொலைபேசிகள் வாங்கப்பட்ட பின்னர் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஊடகங்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

கீரிமலை – காங்கேசன்துறை வீதிக்கு வடக்கு பக்கமாக, செம்மண் வாய்க்கால் சுடலைப் பகுதியில் நேற்று அளவீட்டுப் பணிகள் நடந்தன.

நீண்ட காலத்தின் பின்னர் தமது நிலங்களுக்குச் சென்ற முதியவர்கள் உணர்ச்சிப் பெருக்குடன் காணப்பட்டனர். வயதான பெண்மணிகள் தமது காணியை நினைத்து கண்ணீர் சிந்திய போது, ஆளுநர் அவர்களை ஆறுதல்படுத்திய சம்பவமும் இடம்பெற்றது. (ஐ-07)

## தூக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யொருவர் உயர்நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் நேற்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார். வழக்கு இன்று வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கையில் மீண்டும் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட முடிவை எதிர்த்து இதுவரை 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஊடகவியலாளர் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் சட்டத்தரணி நிரான் அங்கிட்டல் முன்னிலையாகி இடைக்காலத் தடை உத்தரவு பெற்ற நிலையில், தற்போது மேலும் 12 வழக்குகள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட 12 வழக்குகளில் மரண தண்டனைக் கைதியொருவரின் வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது. ஏனைய 11 வழக்குகளும் இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டன. (ஐ)

## முஸ்லிம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவேண்டும் எனச் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்களை நீதி விசாரணைக்கு உட்படுத்தவேண்டிய அவசியம் காணப்படும் அதே வேளை பிரஜைகளைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் அரசுக்கு உள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியாவுக்கான இயக்குநர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள், அந்தச் சமூகத்தினருக்கு எதிரான அச்சுறுத்தல்கள், ஒடுக்குமுறைகளுக்கு அதிகாரிகள் துரிதமாக முடிவு காணவேண்டியது அவசியம்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகளின் பின்னர் அதிகாரிகள் நூற்றுக்கும் மேற்பட்டவர்களைக் கண்மூடித்தனமாகக் கைது செய்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளனர்.

குறிப்பாக பெரும்பாலானவர்கள் அரசு தான் நீக்குவதாக ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு வாக்குறுதியளித்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் எதுவுமற்ற நிலையில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். தேடுதல் நடவடிக்கையின் போது குரானை வைத்திருந்தமைக்காகவும் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனச் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அனைத்துப் பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கு அரசு உடனடியாகவும் பக்கச்சார்பற்ற விதத்திலும் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.

பல இலங்கையர்கள் அனுபவித்த இனவன்முறையும் மனித உரிமைமீறல்களும் தற்போது முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படுகின்றன – என்றார். (ஐ)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தோம். ஆனால் அதைச் செய்தது முஸ்லிம் தீவிரவாதக் குழுக்கள் என்பதை இப்போது அறிந்துள்ளோம் எனப் பரபரப்பைக் கிளப்பியுள்ளார் மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர்.

மங்களராம விகாரையில் நடந்த பௌத்த மத நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முன் ஆதாரங்களை வழங்க விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மட்டக்களப்பில் 63 அரச மரங்கள் வெட்டி அழிக்கப்பட்டுவிட்டன. அவற்றைக் காப்பாற்ற நான் வீதியோரத்தில் உறங்கினேன்.

மட்டக்களப்பிலுள்ள ஒவ்வொருவரும் கடினமானவர்கள், பயங்கரமானவர்கள் என அதிகாரிகள் சித்தரிக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. அந்த அப்பிராயத்தை மாற்ற நாங்கள் முயற்சிக்கிறோம். எனினும், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் உண்மையை வெளிப்படுத்தவுள்ளேன் – என்றார். (ஐ)

## லொறியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர் மோதியுள்ளன.

இந்தக் கோர விபத்தில் சம்பவ இடத்திலேயே லொறியின் சாரதியும் டிப்பர் வாகனத்தின் சாரதியும் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணையைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் லொறியைச் செலுத்தி வந்த சாரதி மதுபோதையில் இருந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது எனப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யார் என்பது தொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி இறுதி முடிவு எடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட்கிழமை மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இதன்போது ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் குறித்தே கூடுதல் கவனம் செலுத்தப்படும் எனத் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் கரு ஜயசூரிய ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், ஜனாதிபதி வேட்பாளருக்கு சஜித் பிரேமதாஸவின் பெயரைப் பங்காளிக் கட்சிகள் முன்மொழியக்கூடும் என்றும், இதற்கு ஐ.தே.கவிலுள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவளிக்கக்கூடும் என்றும் அறியமுடிகின்றது.

அதேவேளை, ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது. (ஐ)

## ஒரே குரலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிக்கும் நடவடிக்கைக்கு எதிராகக் குரல் கொடுக்க நாங்கள் அனைவரும் ஒன்று பட்டு ஒரே குரலில் நிற்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் மற்றும் தென்னவன் மரவாடி முருகன் ஆலயம் ஆகியன தமிழர்களின் பூர்விக மத வழிபாட்டு இடங்கள் பௌத்த மத ஆக்கிரமிப்பினால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. இந்நிலையில் நேற்றுத் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) வடக்கு மாகாணத்தின் பிரதிநிதிகள் இணைந்து அங்கு சென்று ஆலயத்தைப் பார்வையிட்டதுடன் வழிபாடுகளையும் மேற்கொண்டனர்.



முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், ஆ.புவனேஸ்வரன், சபா குகதாஸ் உள்ளிட்டவர்கள் அடங்கிய குழுவினர் ஆலயத்துக்குச் சென்றனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்,

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது என்று சொல்லப்பட்ட 48 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சிங்கள பௌத்த அரசால் தொடர்ச்சியாகத் தமிழர் தாயகம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தாலும் கலை கலாசார மதச் சின்னங்களை அழிக்கும் நடவடிக்கையாலும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது.

ஆண்டாண்டு காலமாக தொல்பொருள் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் தமிழர் வரலாற்றை மாற்றி அமைக்கக் கூடியவகையில் செயற்பட்டு வருகின்றார்கள். பல திணைக்களங்கள் இவ்வாறு ஈடுபட்டு வருகின்றன.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தைப் புனரமைக்க முடியாதவாறு பௌத்த மதகுரு தடையாக இருந்து வெளி இடங்களில் இருந்து அழைத்து வரப்படும் சிங்கள பௌத்தர்களை வைத்துக்கொண்டு அச்சுறுத்துகிறார்.

தமிழர்கள் ஆண்டாண்டு காலமாக பாரம்பரிய பூமியில் இருந்த அடையாளங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைக்கு எதிராகக் குரல் கொடுக்க நாங்கள் அனைவரும் ஒன்று பட்டு ஒரே குரலில் நிற்கவேண்டும். இதேபோல் கிழக்கு மாகாணத்தின் எல்லையில் இருக்கின்ற தென்னவன் மரவாடிக் கிராமத்தில் மலையில் இருக்கின்ற முருகன் ஆலயத்தில் வழிபடுவதற்கும் அதனைப் புனரமைப்பதற்கும் தடைகள் விதிக்கப்பட்டு அதிலும் படையினரின் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. அங்கும் நாங்கள் சென்று பார்வையிடுகின்றோம்.

இவ்வாறான அரச பயங்கரவாதம் என்று சொல்லப்படுகின்ற நிகழ்ச்சி நிரலில் தமிழ் மக்களை இனரீதியாக, மதரீதியாக அழிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக எங்கள் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு எழுவார்களாக இருந்தால் அரசின் முயற்சிகளை நிச்சயமாக முறியடிக்க முடியும் – என்றார். (ஐ)

## கொழும்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய, சிங்கப்பூரில் இதய சத்திர சிகிச்சை மேற்கொண்டிருந்தார். சுமார் ஒரு மாத ஓய்வில் இருந்த கோட்டாபய நாளை இலங்கை திரும்புகிறார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்குகிறார் என்ற தகவல் சில காலமாக அரசல் புரசலாக அடிபட்டு வந்தது. எனினும், ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளும், கூட்டு எதிரணிக்குள்ளும் கோட்டாபயவுக்கு ஓரளவு எதிர்ப்பு இருந்து வந்தது. கோட்டாபயவைக் களமிறக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஆரம்பத்தில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை.

இந்நிலையில், பொதுஜன பெரமுனவின் சார்பில் தான் களமிறக்கப்படாவிட்டால், தனித்துக் களமிறங்குவேன் என கோட்டாபய நேரடியாகவே மஹிந்தவிடம் கூறியிருந்தார். இதையடுத்து, உள்ளகக் குழப்பங்களை சமாளித்து, கோட்டாபயவை வேட்பாளராக்க மஹிந்த தீர்மானித்திருந்தார்.

இந்நிலையில், அமெரிக்க நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்கு, மற்றும் கோட்டாபயவுக்கு ஏற்பட்ட திடீர் இருதயக் கோளாறு ஆகியன, அடுத்த வேட்பாளர் யார் என்ற கேள்வியை மீளவும் எழ வைத்தது.

இருதய சத்திர சிகிச்சை மேற்கொண்டால் குறைந்தது மூன்று மாதங்கள் ஓய்வில் இருக்கவேண்டுமென்பதால், கோட்டாபய களமிறங்காமல் போகலாமென்ற அபிப்பிராயமும் எழுந்தது. எனினும், இந்த கருத்துக்களுக்கு மாறாக, கோட்டாபய ராஜபக்ஷவே ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவது உறுதியாகி விட்டது.

அமெரிக்க வழக்குகள் மற்றும் குடியுரிமைச் சர்ச்சையைச் சுமுகமாக தீர்க்கலாமென கோட்டாபய கருதுகிறார் எனத் தெரிகிறது.

சிங்கப்பூரில் தற்போது மருத்துவ ஓய்வில் உள்ள கோட்டாபய, நாளை இலங்கை திரும்புகிறார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவருக்கு பிரமாண்டமான வரவேற்பளிக்க, பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது. வாகனத் தொடரணியாக அவர் அழைத்துச் செல்லப்படுவார்.

எதிர்வரும் 11ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளை உத்தியோகபூர்வமாக அவர் ஆரம்பிக்கிறார்.

களனி ரஜ மகா விகாரையில் சமய வழிபாடுகளில் ஈடுபட்டு, தேர்தல் பணிகளை அவர் தொடங்குவார் எனக் கூறப்படுகின்றது. (ஐ)

# படுகொலை செய்வதற்கு திட்டமிட்டவர்கள் யார்?

## ஜனாதிபதியிடம் மஹிந்தானந்த கேள்வி

**கொழும்பு, ஜூலை 05**
**ஜனாதிபதியைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டிய அனைத்து அரசியல்வாதிகளின் பெயர்களையும் அவர் பகிரங்கப்படுத்த வேண்டும் என்று கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகே கோரியுள்ளார்.**

மேலும், ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்கும் எண்ணம் அரச தரப்பினருக்கு இல்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக ஜனாதிபதியொருவரை கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகப் புலனாய்வுத் தகவல்கள் ஊடாகத் தெரியவந்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கூறியிருந்தார்.

துரதிஷ்டவசமாக அவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்று விட்டால், அரசமைப்புக்கு இணங்கப் பிரதமர்தான் அடுத்த ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார்.

எனவே, ஈஸ்டர் சம்பவத்தை முன்னிலைப்படுத்திநாம்ஜனாதிபதியிடம்தற்போது ஒரு வேண்டுகோளை விடுக்கிறோம். தயவு செய்து உங்களைக் கொலை செய்யத் திட்டம் தீட்டிய அரசியல்வாதிகளின் பெயர்களை வெளியிடுங்கள்.

தற்போது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு என்ன நடந்துள்ளது என்று பாருங்கள். ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக 16 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு மூன்று வாரங்களில், பதில் பொலிஸ் மா



அதிபர் தெரிவுக்குழுவின் தலைவருக்கு ரிஷாத் நிரபராதியெனக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அதாவது, ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கும் ரிஷாத்துக்கு துளியளவேனும் தொடர்பில்லை என்று பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். இது எவ்வளவு தூரத்துக்கு உண்மை என மக்கள் அறிவார்கள்.

உண்மையில், இந்த ஈஸ்டர் சம்பவத்தை அரசியல் அதிகாரத்துக்காகத்தான் தற்போது அரசியல்வாதிகள் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக்கொண்டே இதுதொடர்பானஅனைத்து நடவடிக்கைகளும் தற்போது இடம்பெறுகின்றன.

இவர்களுக்குப் பிரச்சினையை நிறைவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் என்றும் இருந்ததில்லை – என்றார். (ஐ)

# ஹேமசிறி, பூஜிதவுக்கு பிணை கிடைக்குமா?

## 9ஆம் திகதிதான் தெரியவரும் என்கின்றனர் சட்டத்தரணிகள்

கொழும்பு, ஜூலை 05

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் ஜனாதிபதியால் கட்டாயவிடுமுறைவழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகிய இருவருக்கும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, இவர்களுக்குப் பிணை கிடைக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 9ஆம் திகதிதான் தெரியவரும் என்று இவர்கள் இருவரினதும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்–

உயிர்த்தஞாயிறன்றுஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோரைக் கொலைக் குற்றச்சாட்டு உட்பட பல்வேறு குற்றச்சாட்டு தொடர்பான சந்தேகநபர்களாகக் கருதி கைதுசெய்யுமாறு சட்டமா அதிபரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், கடந்த செவ்வாய் இவர்கள் இருவரையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் விசாரணைக்காக முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் இவர்கள் இருவரும் சுகவீனம் காரணமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து வைத்தியசாலைகளுக்குச் சென்ற குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அங்கு மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து இவர்கள் இருவரையும் கைது செய்தனர்.

இதன்பின்னர் வைத்தியசாலைகளுக்குச் சென்ற கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன இவர்களை நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார். இந்தநிலையில், இவர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் 9ஆம் திகதிக் கொழும்பு பிரதான நீதிவான் நேற்று நீடித்துள்ளார். இவர்களுக்குப் பிணை கிடைக்குமா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 9ஆம் திகதிதான் தெரியவரும்.

இவர்கள் இருவரும் குற்றமிழைக்கவில்லை. இவர்களுக்கான அதிகாரங்களைப் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி பறித்து வைத்திருந்தார். கடந்த வருடம் ஒக்ரோபர் 26ஆம் திகதி அரங்கேற்றப்பட்ட அரசியல் சதிப் புரட்சியின் பின்னர் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டங்களுக்கு ஜனாதிபதியால் அழைக்கப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, பாதுகாப்புச் செயலராக இருந்த ஹேமசிறி பெர்னாண்டோவையும் நேரில் சந்திப்பதை ஜனாதிபதி குறைத்து வந்துள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையாவது ஜனாதிபதியைத் தான் நேரில் சந்திப்பது கடினமாக இருந்தது என நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் ஹேமசிறி பெர்னாண்டோ சாட்சியமளித்திருந்தார்.

எனவே, உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்களுக்கு யார் முழுப்பொறுப்பு என்பது நாம் சொல்லாமலே நாட்டு மக்களுக்குத் தெரியும். எனவே, முன்னாள் பாதுகாப்புச்செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் ஜனாதிபதியால் கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகிய இருவரும் பிணையிலாவது விடுவிக்கப்பட வேண்டும் – என்றனர். (ஐ)

# மட்டக்களப்புப் பல்கலை விடயம்; அமைச்சரவை உபகுழு நியமனம்

கொழும்பு, ஜூலை 05

மட்டக்களப்பு பல்கலைக் கழகக் கல்லூரி தொடர்பில் ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டிய மேல்நடவடிக்கை பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்க அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமைச்சர்கள் மங்கள சமரவீர, மனோ கணேசன், மலிக் சமரவிக்கிரம மற்றும் நகர திட்டமிடல், குடிதண்ணீர் வழங்கல், உயர் கல்வி பதில் அமைச்சர் லக்கி ஜயவர்தன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

குழுவின் செயலாளராக உயர்கல்வி, குடிதண்ணீர், நகர சீரமைப்பு அமைச்சின் செயலாளர் செயற்படுவார். (ஐ)

# வவுனியாவில் நில அதிர்வு

வவுனியா, ஜூலை 05

வவுனியா தாண்டிக்குளம், பத்தினியார்மகிழங்குளம் பகுதியில் நேற்றுக் காலை நில அதிர்வுகளை உணர்ந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தாண்டிக்குளம்,பத்தினியார் மகிழங்குளம்பகுதியைச்சுற்றிய சில வீடுகளில் நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன. காலை 9.52 மணியளவில் இது உணரப்பட்டுள்ளது. நான்கு, ஐந்து செக்கன் வரை இது நீடித்துள்ளதுடன் வீடுகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்பட்டிருக்கவில்லை. (ஐ)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 05

நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த மார்ச் மாதம் முதல் ஜூன் வரையான காலப்பகுதிக்குள் 66 வீதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் 2200 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனச் சபையின் தலைவர் கிஷூ கோமஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை சர்வதேச சுற்றுலாப் பயணத்துக்குச் சிறந்த நாடு என, உலகில் பிரபலமானதும் பயண வழிகாட்டியுமான 'த லோன்லி பிளானட்' சஞ்சிகை மீண்டும் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதத் தாக்குதல்களால் சில நாடுகள் இலங்கைக்கான பயணத்துக்குத் தடை விதித்திருந்த நிலையில், பல நாடுகள் அந்தத் தடையை நீக்கியுள்ளன.

எனினும், ரஷ்யா, மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட சில நாடுகள் பயணத் தடையை இதுவரை நீக்கவில்லையென இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# வவுனியாவில் 7 கிராம மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஜூலை 05

வவுனியா பூவரசங்குளம் சந்தியில் இருந்து செட்டிகுளம் செல்லும் பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி நேற்றுக் காலை ஏழு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வீதியை வழிமறித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

பூவரசங்குளம் சந்தியிலிருந்து செட்டிகுளம் செல்லும் பிரதான வீதி பல ஆண்டுகளாகப் புனரமைப்புச் செய்யப்படவில்லை. பல போராட்டங்களை மேற்கொண்டும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை காலமும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்த தட்டான்குளம், சண்முகபுரம், வாரிக்குட்டியூர், கங்கன்குளம், மணியர்குளம், செட்டிகுளம், பூவரசங்குளம் ஆகிய ஏழு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை மேற்கொண்டனர்..

போராட்ட இடத்துக்குச் சென்ற வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை உறுப்பினர் ஆர்.எச். உபாலி சமரசிங்கவிடமும், பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும்



தமது மகஜரைக் கையளித்து மக்கள் போராட்டத்தை நிறைவு செய்தனர்.

இதனால் அப்பகுதி வீதியூடான போக்குவரத்து சற்று நேரம் தடைப்பட்டது. (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.07.2019 இல் வெளியிடப்பெற்றது.